திருந்துமூற்றிருகுணர்ந்தோர்செவிப்புலன்றேக்கவாரி
யருந்தமுதனையதொன்னூல்வழிநடாயகலமேத்தி
பெருந்தமிழ்பூனைத்தவிர்நூற்பெயர்பகுனிப்புராணம்.

இ-ள். அதாதியே வந்து பொருந்திய மூக்குணங்களும் மனமுதலிய அந்தக் காரணங்களும் ஐம்புலன்களும் ஏனைய உட்கருவிகளும் திருந்த முறைமைப்படி கல்வி கேள்விகள் முழுவதும் ஒருசேர அறிந்த பெரியோர்கள் தமது செவியறிவிற்கு ஏற்றவாறு நிரம்பிய நூல்களை ஆராய்ந்து என்னுள்ளே ஒரு அமுதத்தை யொத்த முதனூலின் வழியே கூட்டி, மலையில் வில்லாக ஏந்திய சிவபெருமானால் அருளியே உண்டாக்கப்பட்ட பெரிய செந்தமிழால் அலங்கரித்துச் செய்யப்பட்ட இந்நூலின் பெயர் பூதெ வரிப் பழநிப் புராணம் எனப்படும்.

மூக்குணமாவன—சாத்துவிகம், இராசதம், தாமதம். அந்தக் காரணமாவன—மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பனவாம். புலன்களாவன—சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம் என்ப

னைத்தாம். உள்ளனவே மெய் வாய் கண் மூக்கு, செவி என்னும் ஐம் பொறிகளும், தசவாயுக்கள் முதலியவுங் கொள்க அசலம்=அசைத்தல் இல்லாதது. சிவபெருமான் சம்பிரதாயத்தை யருளிய காலத்தே தமிழ் மொழியையும் அருளினர் என்பது தோன்ற "அசல மேத்தி பெருந் தமிழ்" என்றார். இதனைச் சம்பிரதாயத்தினின்றும் பிரித்து தென்பார் கூற்றும், இடையிற் சிலரால் கட்டப்பட்ட தென்பார் பத மும் மறுக்கப் பட்டன. (ஈ)

நூல் செய்த காரணம்.

இந்தநூலாரியத்தையீர்ந்தமிழ்த்தொடர்புசெய்ய
வந்தகாரணம்யாதென்னில்வண்டமிழ்நிலத்தின்வைகுங்
கந்தவேளடியார்நாயங்கலந்தருட்டிருவுள்ளமுற்று
மன்னவாழ்வடையலாம்பேரின்பமுமடையலாமே.

இ-ள். வடமொழிக்கு ளுள்ள இந்த நூலை, தண்டமிழ்ப் பாக்களாலே செய்யவந்ததற்குக் காரணம் யாதென்று கேட்பின், சொற் பெருள் வளங்களையுடைய தமிழ் வழங்குந் தேயத்தின்கண் விருப்புக் கந்தக் கடவுளின் அன்பர்கூட்டங்கள் ஒருசேர டொருவர் கலந்து பாராயணஞ் செய்து, அக்கடவுளது திருவருட் கடலிலே முழுகச்செய்யும் அந்தப் பெருவாழ்வையும் பெறலாகும், அத்தனித முத்தி யாகிய பேரின்பத்தையு மடையச் செய்தலு மாகும் என்னுங் காரணமே.

தமிழ் என்பதற்குத் தனித்த ழகாரத்தை யுடைய மொழி யெனவும், தனிமையான மொழி யெனவும், இனிமையையுடைய மொழி யெனவும் பொருள் கூறுப. வடக்கண் வேங்கடமுக் தெற்குத் தென்னாடும் எல்லையாக வுடையது எனவும், வடதின்கண் விரும் தெற்றின் கண் கடலும் எல்லையாக வுடையது எனவும், பண்டிதரே யது வெனவும், சோழ நாடே யதுவெனவும் பலரும் பலவாறு கூறுப. (உ)

பாயிர முற்றிற்று.

க

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

அவையடக்கம்.

அறுசீர்க் கழிநெடிலடி. ஆசிரிய விருத்தம்.

வானமுட்பருகுமவிரைமலியுவர்ச்சும்புக்தண்
காவிருங்குளனிமேவிக்கவர்பசுங்கேடுமின்போற்
றேனிமிர்சிசாகனன்றன் கொளிற்றியேன்புன்சொற்
றூனிதாகன்காம்பாலுமை சீர்ணைனப்புரிவதாமே.

இ-ள். மோகன் உட்கொள்ளுஞ் சமூத்திரத்தி னிறைந்த உப்பு நீரும், பொலிவையே குளிர்ந்த காட்டினிடத்துப் பெருமலையை யுடைய குளவியானது சென்று எடுக்கின்ற பசிய புழுக்களும் போல, தேன் வண்டு சொலிக்கின்ற ஆட்டிக்கடா வாகனத்தாலே கந்தக் கடவுளின் மெய்யன்பாகு மனத்தில் இது கொள்ளப்படுமாயின், (கல்வி கேள்வி களில்) சிறிய வுமை யனை இழி மொழிகளையுடைய இத்தாலும் வான் தொண்டுபட்ட இயற்கையாலே நேர்த்த தாகும். (க)

வார்கடற்புலவுமோரார்மைநிறச்சேலுமோரார்
நீர்மையுவருமென்னுரிஞ்சித்திலமணிகொள்வாரிற்போற்
சீர்தபுணர்ந்துடீர்ந்தசொற்பொருட்கவைதிரிதறோரார்
கூர்வெயிற்பெண்டேவேள்காதைகுறித்தானல்கொள்வர்கல்லோர்.

இ-ள். நீண்ட கடலின்க ணுள்ள புலால் நாற்றத்தையும் அறியமாட்டார், கருநிறத்தை யுடைய செறிருத்தலையும் கவரியார், நீலமணிக்க உப்புத் தன்மையையும் கோத்தார், முத்துக்களையும் இரத்தினக் கலையும் விரும்பி யெடுப்பார், அதுபோலப் பெரியோர்களும்

சீர்சொழிபி னுள் பேன்ற கொடுஞ் சொற்களும், பெருள்களும், சுவைகளும் வேறுபட்டதையும் பாராதவராய், கூரிய கதிர்வேற் பெருமானது கதையைச் சொல்லுவ தென்றுணர்ந்து மேலாகக் கொள்வர்.()

புலவரும்போற்றுக்தாதைதங்கொருமொழிபுகன்றவிற்பிற்
புலவனுக்கறம்போதித்தும்பொருளைவகைசிரிவுகூட்டிப்
புலவருக்கருளியும்பார்புகழ்ந்திவகிரியில்வைகும்
புலவனுட்கொள்வான்பாட்டுப்புகலென்புலமைமன்றே.

இ-ள். தேவர்களுக் கதிகின்ற தமது தந்தையாகிய சிவபெருமானுக்குப் பிரணவப்பொருளை யுபதேசித்தும், பொதிய மலையிலுள்ள அகத்திய முனிவர்க்குத் தமிழிலக்கணத்தைப் போதித்தும், அகப் பொருளின் வகையுரை விரிவுரைகளையுஞ் சேர்த்து ஓராய்ந்து அவற்றின் உண்மைகளைக் கடைச்சங்கப் புலவர்க்கும் தெரித்தும், பூமியிலுள்ள சகர்களாலே புகழ்படுகின்ற கெளரியம் எழுத்தருளி யிருக்கும் பெரும் புலவரான குமரப் பெருமானர் வீரபுயமடி பரதேசப் புகுந்த எனதறிவு கண்டதன்று. (உ)

மூதுணர்வுடையோர்வேதமுதலியதெரிக்கிற்றொன்று
மோதுசொல்லுமுதுமுண்டேதக்குமோவள்ளியைவேற்சேய்பொற்
காதுகனென்சொனன்றுசங்கைக்குமோதாய்க்குமேயோ
பாதுசொல்லறியேனுரைதப்புதற்கிதன்செய்தேனே.

இ-ள். பேரறிவுடைய புலவர்கள் வேதமுதலிய பல்லநூல்களையெல்லாம் ஓராய்ந்து, எக்காலு மோதிய சொற்களாகிய அகிதத்தையுட்கொண்டு கிறைத்த வள்ளிய இவ்விதழில் முற்றிய மேலாடையுத்தையுடைய கந்தக் கடவுளினது அழகிய செயல்கள், எனது சொற்களையிடத்தை வெறுத்து விடுமோ, அல்லது ஏற்றுக் கொள்ளுமோ, ஏதும் சொல்வதற்கு அறியவில்லை; பாடவேண்டுமென்னும் அவாவிடத்தைச் செலுத்தலால் யான் என்செய்வேன். (பாடத்தொடங்கினன்.) (ச)

அவையடக்கம் முற்றிற்று.

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

முதலாவது,

கிரிச் சருக்கம்.

முனிவர்களாலே துதிக்கப் படுகின்ற வியாத முனிவர் பாலுக்க ராகிய சூதமுனிவர் நைமிசாரணியத்திற் சென்றும் அவ்விடத்திருந்த தவத்தினர் யாவரும் அவரைக் கண்ட அளவில் எதிர்சென்று உபசரித்து, எமக்குக் கிடைத்தற் கரிய பெருவிருந்து வந்தென்று மனமும் முகமும் மலர்ந்தி கொண்டு, உபசார மொழிகளைச் சொல்லி, அவரை யாசனத் திருத்தினர். எனைய உபசாரங்களையுஞ் செய்து, கல்வி கேள்விகளில் வல்ல முனிவரே! சூலபாணியராகிய சிவபெரு மானது புகழை நிரிக்கும் புராணம் கேட்பதற்கு மிக்க அவா வுள்ளோம். தேவரீர் கருணை கூர்ந்து திருவாய் மலர்ந்தருள வேண்டு மென்று முறை யிரந்தார். அதுகேட்ட சூதமுனிவர் கூறுவார்.

எத்தியாம் பரம னிணையடி மறவா வளத்தீர்! புரா ணத்தை யோதுதற்கு இடம், காலம், பாத்திரம் வேண்டும். இவ்வனம் தெய்வ வனமாகலானும், இக் காலம் நல்ல கால மாகலானும், சிவனடியராய கீழ்க ளிருத்தலானும் இப்புப் புரா ணமோதற்குத் தருதி வந்தது எவ்வாறு. முனிவர் யே கேள், முன்னாட் பதினெண் புராணங்களையும் உபதேசித்

தீர். அவற்றுட் சிறந்த கந்தபுராணத்திலே கிரிப் பிரகாச காண்டத்திலே மேரு முதலிய மலைகளையும் புவனங்களையுங் கூறிய பாகத்திலே, எல்லா மலைகளிலும் விசேடித்த தாகித் தென்றிசையிலே வராககிரி என்று ஓர் மலையுளது. அத னிடத்தே பிருமை யின்பங்களையும் அளிக்க வல்ல ஒரு தல மிருக்கின்றது என்று சொன்னீர். அதன் பெருமைகளெல் லாம் விரித்துக் கூறுதிர் என்றிரந்தனர். முனிவர் பெருமான் உலகையுடையாய், சுகதாசர்களே! அதனது பெருமை யாவராலும் அளவிடக் கூடாது. ஆயினுஞ் சுருங்கச் சொல் வேன். கேண்மின்.

இப் பூவுலகின்கண் மலைகள் அளவிலவாக விருந்தாலும் மேரு, ஏமகூடம் (கதிர்காமமலை) இமயம், மந்தரம், கயிலை, கந்த மாதனம் என் பவற்றில் குமாரக்கடவுள் எக்காலும் வீற் றிருப்பர். இன்னுங் கடம்பமலை, சம்புமலை, பொதியமலை, ஆலி, கேதார பருப்பதம், சீபருவதம், திருக்காளத்தி, திருக் கழுக்குன்றம், திருத்தணிகை, வேங்கடம், குதனேரி, திரு வண்ணுமலை, முதுகுன்று, திருச்சாயம், திருச்செங்கோடு, காராயணகிரி, கொல்லி, சங்கோய்மலை, திருக்கற்குடி, கிரி சாமலை, சுவர்மிமலை, குன்றக்குடி, திருப்பரங்குன்றம், பழ முதிர் சோலைமலை, திருச்செந்தூர்க் கந்தவெற்பு, பொதியகிரி, கிரிகுடாசலம், வெண்ணெய்வரை, கொடுமுடிக்கிரி, கோக்கு மலை, மருதமலை, அத்திரி, பேரூர் வெள்ளியங்கிரி, காளமலை, வராககிரியென்னும் பெயர்கொண்ட மலைகளிலே குமார சுவாமி எழுந்தான்றும் வீற்றிருந் தருளுவர். இவற்றுள் வரா க

மலை என்னும் அம்மலைக்கு வடசாரலில் விட்டுணுமலையொன்
றுளது. வாயு திக்கதிபதியவடமேற்குத் திசையில் ஒருகுரோச
தூரத்தில் பிரமன்மலையுளது. அதற்குக் கிழக்கே சிவபெருமா
னுறையுஞ் சிவம் பொன் மலை யுளது. அம்மலை பூமியி லுள்ளா
ரானும் விண்ணுலகத்தாரானும் அளவிடற்கரிய பொலிவை
யுற்று, சத்தி மலியோடி கூடி, குமாரக்கடவுள் தம்வே தக்குரு
வாற் சிவமலை யென்னுமது சிவனே போன்று நின்றது.
சிவனது சன்னிதியைப் போலவும், திருவிழி போலவும், திரு
முகம் சேரவும் விளங்குவது. அச்சிவமலையிற்றன் சூரபன்
மனிபகரரைக் கொன்று தேவரைக் காத்த பெருமான் வீற்
றிருந்தருளுகின்றார். அதன் பக்கத்திற்றான் திருவாவினன்
குடித்தலம் என்னும் பழநித்தலம். அதன் பாங்கர்க் கபில
வனம் உண்டு. கோங்குவனம் என்னுமோர் தலமும் உளது.
இவற்றின் பெருமைகள் சொல்லற்கு அரியனவா யிருந்தம்
மனத் நிலவற்றை யெடுத்துக் கூறுவோம் என்று சூதமுனிவர்
சொல்வாராயினர்.

புனிதமாமுனிவர்போற்றும்பொருவருனியாதவேத
முனிபுகழ்ந்தபுராணமுழுதொருங்குணர்ந்தருளன்
பனிமுதலியவருத்தும்பருவக்கட்குடையாதென்று
நனிதவம்புரிவோர்வைகுமைசாரணியகேர்ந்தான்.

இ-ள். பரிசுத்த மூடைய பெரிய இருடிபர்கள் அதிகரும் ஒப்பில்
லாத வேதத்தில் வல்ல வியாச முனிவர் சொல்லிய "பழைய புரா
ணமுழுவதையும் ஒரு சேர அறிந்த சூதமுனிவர், பனிமுதலிய வருத்
தின்ற பருவ காலங்களுக்கு (தம்மூடல்) வருத்தமடைவதென்று, விக்

தலத்தைச் செய்கின்ற முனிவர் இருக்கும் சமிசாரணியத்தை யடைந்
தார். (அ)

சென்றமாதவனேவதைத்திரப்பொருதுணர்ந்தீன்றும்
வென்றம்மாமுனிவர்கேர்ந்துவேளாவாவறத்தழீஇக்கொள்
முன்றன்மலிருந்துவத்தினம்மனிழ்வுதூங்க
நன்றறக்கொணர்ந்தோர்பீடத்திருந்தினர்முகமனல்கி.

இ-ள். அவ்விடத்தட்போன சூதமுனிவரை, வேதத்தைப் பொருளோ
டறிந்து, மூக்குற்றங் கழியும் வெற்றி கொண்ட பெரிய முனிவர்
சேர்ந்து, வேண்டும் அவாவானது மிகத் தழுவிக் கொண்டு, இன்றை
தினம் கல்ல விருந்து வந்தென்ற மனமகிழ்ச்சி மிகுக்க, கண்ணை
பொருத்தக் கொண்டவர்க்கு ஒரு பீடத்தில் இருந்தி உபசாரங்களைச்
செய்தி. (ஆ)

அருக்கியமுதலாகியதிரோப்பாற்றியபத்தன்
மூருக்கித்தச்சருக்கமீட்டுமுகநயக்கினவிகூறிச்
சருக்கமில்கேள்வியோய்முச்சடாகிலப்பெருமான்றெல்சீர்
பெருக்குதல்புராணங்கேட்கும்வேட்கையேம்பெரிதென்றார்.

இ-ள். அருக்கியம் முதலான உபசாரங்களை யெல்லாஞ் செய்து,
எழிடத்தையுண்டாகும் ஆசனத்தைாற் போக்கி, அமர்ந்த முனிவர்
முகக்க மலரை யெத்த உதயகேக் குவித்துப் பின்னரும் உபசார
மொழிகளை உரைத்து, முதலிலாதி விரித்த கேள்வியறிவுடைய முனி
வரே! மூன்று ஒளி கொண்ட இவ்வேளும் வேலாயுதப் பெருமானது
பழமையான சரிதத்தைக் கேட்டு மிகுதியை யெத்தச் சொல்லுகின்ற பழைய
புராணத்தைக் கேட்கும் விருப்பம் பெரிதும் உடையேம் என்று கூறினர்
(சூனிவர்.) (இ)

அவ்வுரைகேளாமன்னரருளினீராரணத்தின்
செவ்வனைகமழ்தருதிருப்புராணங்கடெரியவோதி

வெல்வமிதேசகாலபாத்திரமினைவகள்வேண்டும்
வெவ்வியல்பில்லீர்சொல்லில்லிரியுமோர்நிற்சொல்வரம்.

இ-ள். முனிவர்கள் கூறிய வார்த்தைகளைக் கேட்டுச் (சூதமுனிவர் சொல்வார்) கன்று சொன்னீர், வேதங்களையும், செவ்விய சிவாகமங்களையும் பழமையாகிய புராணங்களையும் தெளிவுறும்படி சொல்லுங்கால், குற்றமில்லாத இடம், காலம், பாத்திரம் என்னும் மூன்றன் வேண்டும், கொடிய குணமில்லாத முனிவர்களே ! அவற்றைச் சொல்லுங் காலத்து விரியுமேம். ஒருசிறிதா எடுத்துச் சொல்வாம். (ச)

நற்பெருந்தேசநற்பூதநற்றெய்வநதிநிர்த்தங்க
ணற்பெருந்தவவனங்கணிறைன்னகர்மடங்க
ணற்பெருங்கோயிலாதியவற்றினுநற்காலத்தி
னற்பெருந்தவத்தோர்கேட்பநவிற்றுகென்றனர்னன்னூலோர்.

இ-ள். நல்ல பெரிய தேசம், சிறந்த மலைகள், தெய்வத் தன்மை பொருந்திய ஆறு, புண்ணிய தீர்த்தங்கள், நல்ல பெருந் தவத்தைச் செய்யும் ஆணியங்கள், காடு, நல்ல நகரம், மடங்கள், சிறந்த பெரிய தேவாலயங்கள் முதலிய இடங்களில், சுபகாலத்திலே நற்குண மூடைய பெரிய தவத்தினர் கேட்கும்படி சொல்லுக வென்றுரைத்தார் நல்ல நூலில் வல்ல புலவர்கள். (இ)

ஆதலின்வனத்துட்டெய்வவனமிதுவன்றேதுமைக்
காதலினிறைஞ்சுமிந்தக்காலநற்காலமன்றே
காதலிதழிவேணிச்சங்கரன்றொண்டர்தம்மின்
மூதறிவினிர்சீரன்றேமொழிகுவனும்பாலென்றான்.

இ-ள். ஆதலால் காசிகனுள் இக்காடு தெய்வத்தன்மை பொருந்திய காடு ஆகும். உன்னை (புராணங் கேட்கவேண்டி யென்னும்) விருப்பத்தில் ஆழ்த்துகின்ற இக்காலமும் நல்ல காலமாகும், மகாத்மாக்

பொருத்யிகொன்றைப் பூமாலையைத் தரித்த சடாமுடியை யுடைய சிவபெருமானை அடியவர்களுட் பேதிவுடையவர் கீயிலல்லரே, இன்ன காரணத்தால் உக்களிடத்து அதனைச் சொல்லென் என்றார் (சூத முனிவர்.) (ச)

என்பதுமுனிவர்கோளாவெதிர்முனிவரினோக்கி
முன்பருளினேபுராணமுழுவதுமவற்றுட்காத்த
மின்பொலிசிவப்பிரகாசகாண்டத்தினிமேருவாதி
நன்கெழுகிரிகளுந்தானங்களுரைற்றுமெல்லை.

இ-ள். என்ற சொன்னதை மௌனசாமியத்து முனிவர்கள் கேட்டு, எதிரில் இருந்த முனி சிரேட்ட சாயை சூதரைப் பார்த்து, புராணங்கள் எல்லாவற்றையும் முன்னரே எமக்கு உபதேசித் தருளினீர். அப்புராணங்களுட் காத்த புராணத்தில் ஒளி வீசுகின்ற சிறப்பிரகாச காண்டத்திலே, மேருமலை முதலாகிய கன்மை வாய்ந்த மலைகளையும், தலங்களையுஞ் சொல்லுங் காலத்தில். (எ)

திறத்தனிரிகளுட்டென்றிசையினிலீர்கொண்மேக
நிறைந்தருவாகிவெற்பொன்றுளதுதானீலிகண்
ணுறைத்தளதின்பமுற்றிதருவதோர்தலமுண்டென்றே
மறைந்தனிவகையினன்றின்றருளுநிகினினென்றார்.

இ-ள். சிறப்புடைய மலைகள் யாவற்றினுஞ் சிறந்ததாக, தெற்குத் திசையிலே கருக்கொண்ட கரிய மேகத்தை யொத்த நிறத்தை யுடைய வராகமென்ற மலை இருக்கின்றது. அதனிடத்தில் இன்புலகவின்பங் களையும் முத்தியையும் அளிப்பதாய ஒருதலம் உளதென்று சொல்லிக் கூறினீர். இப்போது அதனை விரிவாகச் சொல்லியருள்க வென்றார். (அ)

என்றவரிசைப்பக்கேளாவிருத்தவன்சிரத்தனக்கி
நன்றிதுவன்றிதன்றேமைதுநன்கருத்துமற்றப்

பன்றிவெற்பியல்புமந்தப்பார்கரின்பெருமையும்யா
சொன்றறப்புகல்வார்சேடனுமைக்கவுமியவென்றால்.

இ-ள். என்று இப்முனிவர் கூற, பெரிய தவத்தினரான ஞாழமுனி வர் தம்மை யடைத்து, முனிவர்காள்! நீவிர் கூறிய இது கல்லது கல் லதே. நமது எண்ணமும் இதுவே. அவ்வாசை மலியின் தன்மைகளே யும், அதன் பக்கத்துள்ள தலத்தின் பெருமை களையும் முடிய சொல்ல வல்லவர் யார்? ஆதிசேடனுலுஞ் சொல்லுதற்கு முடியா தென்றால். (க)

ஆயினுமரியவற்றுளரியதைத்தெரியுமாறெங்
தாயினுமினியஞானதேசிகன்சாற்றல்வேண்டி
நீயனவயறையென்றீர்நீமலவாக்குணார்த்துநெஞ்சிற்
பாயிருமிருத்துளீர்யாமறிந்தனவுகருகின்றும்.

இ-ள். அவ்வாறு சொல்லற்குக் கூடாதானுலும், அரியவைகளுட் சிறந்த விஷயத்தை யுணருப்படி நமது தாயைப்பார்கினுஞ் சிறந்த ஞானகுருவே யுண்மையை தெரித்தல் வேண்டும். நீர் சொல்லீரான என்று கூறினீர், சுத்தமான சொற்களைக் கேட்டறிந்து மனத்தின்கட் பொருந்தும் பரந்த மல இருளை நீக்கியுள்ள முனிவர்களே, யாம் அறிந்த வற்றைச் சொல்கின்றேம். (கo)

எனமனத்தடர்க்கொண்ஞானதேசிகனிணைப்பொற்பாத
நினைமலர்களினென்போதலர்த்திநாண்மலர்ப்பூக்கொண்றை
வினையும்வேணியர்க்கோர்வாய்மைபுகன்றதேசிகோகரமானி
னினைவரமுகூர்த்தமொன்றுநினைத்துளங்குமிப்பரிசுரைத்தார்.

இ-ள். என்றசைத்து, மனத்தினுங் வேரூன்றி யுள்ள அழகிய ஞானசாரியரது அழகிய இரு பாதங்களாகிய தெய்வத்தன்மை பொருந்திய மிருது வான தாமரை மலர்களை விரியச் செய்து, அன்றலர்ந்த கொன்றைப்

பூமாலையைத் தரித்த சடாமுடியை யுடைய சிவ பெருமானுக்கு ஒரு உண்மைப் பொருளை யுபதேசித்த பரமாசாரியராகிய பழநிப் பெருமானை மனமொழி மெய்களால் பொருந்தும்படி ஒருமுகப்படுத்து காலத்தியானித்து, மனங் குளிர யப் பெற்று. (கக)

மாமறைத்தலைவர்கேண்மோவனையனப்பிலவுண்டேனுங்
காமர்பொற்குவட்டிலேமங்கலவிமாசலத்திற்றெய்வத்
தூமணிமத்தத்தில்வெள்ளியங்கிரியிற்றுல்லோ
மேமுறவைகுங்கந்தகிரியில்வேறுறையுமென்றும்.

இ-ள். பெரிய வேதங்களுக்குத் தலைமை வாய்ந்த முனிவர்களே! கேட்பீராக, (இப் பூவுலகின்கண்) மலைகள் அளவில்லாதன இருக் தாலும், அழகிய மேருமலையினும், எல்லோரும் என்னும் கதிரை மலை யிலும், சிறந்த இமயமலையிலும், தெய்வத் தன்மையுடைய சுத்தமான அழகிய மத்தமலையிலும், கயிலாய மலையிலும், பெரியோர் இன்ப முற்று இருக்கும் கந்தகிரியிலும் கந்தசுவாமி எக்காலத்தும் நீங்காது வீற்றிருப்பர்.

மறை - இரகசியப் பொருளை யுடையது என்பர் ஆசிரியர் நச்சி னார்க் கினியர். கேண்மோ - மோ, முன்னிலை யசை. "ஏமஞ் சுவின்" என்பதற்கு, இன்பஞ் சிறந்துள்ள என இமாசலத்திற்கு அடையாக்கு வாரு முளர். கதிர மலையாவது - இலக்கையிலே தென்பாகத் துள்ள சிவ்விய தலம் இதுவே சூரபன் மராதியசுரரை யழித்தற்குக் கொண்டபாசறை யென்பது தனிப்பு. என்னை? மகேந்திரக் கடல் என் னும் இந்திரமுத்திரம் பக்கத்தில் இருத்தலானும், கந்த புராணத்தார் கருத்தும் அதுவே யாகலானு மென்க. (கஉ)

தண்மலர்க்கடம்புசம்புதண்சிலம்போதிமேலே
விண்ணிவராலிரான்குமேருவின்ருணபாலாதி

நண்ணுகாற்றினைசினின்னிரைவலத்தினிவ்வேலு
மண்ணலங்குமரிகண்டத்துளபலவடிக்கண்மாதோ.

இ-ன். குளிர்ந்த புட்பங்களே யுடைய கடம்புமலே, சம்புமலே குளிர்மையான போதிமலே மேலாய ஆகாயத்தை யளாவிய "ஆலிமலே யென்னும் சான்றும், மேருமலையின் மேற்குத் திசை முழுவதும் பொருந்தும். சான்று திக்குகளிலும் பிரசித்தியிலுள்ள பெருமையிற் சிறந்த குமரி கண்டத்தினிடத்தே பலமலைகளுள்ளன. (அவற்றையுஞ் சொல்வேம்.)

மேருவின் தென்பாகத்துள்ள வெள்ளி சார்வம் பழநிவிராதம் ஓதி றை சசனத்தான் இத்தீவிற்கு காவலாகிய எனவும், சம்புத்தீவு எனவும் டெயர் குறிக்கண்டம் இத்தியா இலங்கை முதலாயின. (கூ)

கலி நிலைத்துறை.

ஒளிவளர்குகேதாரமென்றுரைப்பதிதோரோங்க
நெளிவுகொண்டீர்ப்பருப்பதத்தேமலர்பிலிற்றி
யளிவிழைந்தவர்தொழுந்திருக்காளத்திபசலக்
தளிர்நறும்வர்ச்சோலைசூழ்தருங்கழுக்குன்றம்.

இ-ன். புகழ் விளக்கப் பெற்ற கேதாரம் என்று சொல்லப் பெறுதோர் மலையுளது. தெளிவு பொருந்திய சேயிலர், தேன் பொருந்திய பூக்களைச் சொரிந்து அன்பை விரும்பிய அடியார்கள் வணங்குந் திருக்காளத்திமலே, தளிர்களும் கல்ல புட்பங்களு முள்ள சோலையாற் சூழப்பட்ட திருக்கழுக்குன்றம். (கூ)

கொல்லினத்தவெல்கொடிமறக்கிரோதர்தஞ்செருவிற்
றெல்லிலைநல்லெழில்காட்டிவெள்குவர்க்கருள்சுரந்து
வல்லிருந்துளிவளமுலைவள்ளிமென்குறமான்
செல்வியோடமர்ந்திருப்பதுசெருத்தணிக்குன்றம்.

இ-ன். கொல்லுகின்ற கோபத்தையுடைய மிக்க திலிலே வல்ல வேட்களோடு செய்த யுத்தத்தில், பழமையாயே தமதுகல்ல அழகைக் காண்பித்து, தம்மை விரும்பி பூசிப்பவர்க்குக் கருணை யளித்து, குளிர்ந்த சருவையும் பொன்ற திரண்ட அழகிய தனங்களையுடைய குமரக்கடவுளாகிய வள்ளிப்பிராட்டியாருஞ் செல்வ மகளையுடன் அரசு வீற்றிருப்பது திருத்தணிகை மலையாகும்.

செருத்தணி=யுத்தத்தினிடம், தணி=தணிந்த இடம். அதனுக்கு குறுகின முதலிய அசுரர்களைச்செய்த யுத்தத்தினிடமும், கம்பி முதலியவர் களோடுசெய்த போரினிடமும் வந்து தணிந்த இடமாதலால் இப்பெயர் பெற்றதென்க. செருத்தணி யென்பது, இக்காலத்தார் திருத்தணி யென வழங்கப்படுகின்றது. "சென்னைக்கருகே சாத்து" என்னும் பாடல் நிறைந்தது. மான் செல்வினை இலக்குமியாகிய மானிடமகள் என்னுமாம். (கூ)

தண்டுழாய்குலவுமிந்தசக்கரம்பிழைத்து
மண்டுபொருகளிசெய்யவெகிலநாகைத்தைத்
தொண்டல்சொரிதற்திகழ்திருப்புடைகொடிகொள்ளி
வின்டுவேலுறைவேங்கடமிளிருகுனேரி.

இ-ன். குளிர்ந்த துழாய் மாலையும் சுதரிசனமும் அணிந்து, சக்காயுதமும் வேலாயுதமும் தரித்து, செருவில பீதாம்பரமும் சிவந்த வஸ்திரமும் இடையிற் சுற்றி, மேகம் போன்ற கருநிறமும், சிவந்த நிறமும் கொண்டி, கருடன் சேவல் என்னும் இருடதைக் கொடிகளுக் தாங்கி, விட்டுணுவும் சுபிரமணியக் கடவுளும் வீற்றிருக்கின்ற திருவேங்கடமலையும் குனேரியு முள்ளன.

விட்டுணு-துழாய்மலே, சக்காயுதம், பீதாம்பரம், கருநிறம், குடக்கொடியென்னும் இவர்களையும், சுபிரமணியப் பெருமான்-குரா மலே, வேலாயுதம், சிவப்புடை, செந்நிறம், சேவற்கொடி என்னும்

இவர்களைப் தாங்கி வீற்றிருக்கின்றனர் என்பதாம். வேங்கடம் திருப்பதி எனவும், குன்றோரி சேன்றோரி எனவும் இக்கால வழக்கு. திருவேங்கடம் அருளிய சுப்பிரமணியதலம் என்பது கந்தபுராணத்தானும், பிரமாண்டபுராணத்தானும், தணிகைப் புராணத்தானும் வேங்கட சுப்பராயன் என்னும் பெயருள்ளவனாலும் பெறலும். பிரமதேவரைச் சிறையில் வைத்தல், சிருட்டி செய்ய வேறத்த கந்தக் கடவுள் வேங்கட்டபதி சென்று படைத்தனர் எனப் புராணங் கூறுகின்றது. இதுபற்றியே,

"உலகக்கடந்த நெடுமுடி யண்ணலே சோகி உலகந் தழுஞ்செய்து
விடுபெற்ற மலைபோல்வாள்" என ஒளவையாரும், நச்சினார்க்கினியர் என்னும் பண்டையாசிரியரும் உரைகூறினர்

தொல்காப்பியச் சூத்திர விருத்தியிலும், மாதவப் பெருந்தகையாகிய சிவஞான யோகிகள், "தமிழ் காட்டிற்கு வடக்கட் பிறவிற்கு ஈயு முளவாக வேங்கடத்தை யெல்லையாகக் கூறினர், அத்தியனுக்குத் தமிழைச் செவியறி வுறுத்த செந்தமிழ்ப் பரமாசாரிய னிய அறுமுகக் கடவுள் வரைப்பு என்னு மியைபு பற்றி" என வரைந்தமை காண்க. விடினுவுத் தவஞ் செய்து அம்மலைக்கண் வசிக்கும் வரத்தைக் குமரக் கடவுளிடம் பெற்றமையால் அவரும் அமர்வது கூறப்பட்டது.

செங்கண்மாயனுந்திசைமுகக்கடவுளுமகந்தை
பொங்கியேனமுமன்னமுமெனப்புனியகழ்ந்து
மங்கன்வானுறீஇமேடியுமடிமுடிகாணச்
சங்கரன்றழற்பிழம்பெனத்தயங்குதோல்வில்வல்கல்.

இ-ள். சிவந்த கண்ணையுடைய விட்டினுவும் கான்கு முகங்களையுடைய பிரமதேவரும் (சமே பிரமம் என்று ஒருவர்க் கொருவர்) அகங்காரம் மிகுத்து, பன்றியும் அன்னமும் ஆகவடிவெடுத்துப் பூமியைத் தோண்டிச் சென்றும், அழகிய இடபகாரூடமாகிய ஆகாயத்தை யுருவிச்

சென்று தேடியும் அடிமுடிகள் காணப்படாத சிவபெருமான் அக்கினித் தூண வடிவாக விளங்கிய பழைய திருவண்ணாமலை முளை.

இச்சரித விரிவைக் கந்தபுராணம் அடிமுடிதேடலத்தும், உபதேசகாண்டம் சிவரிதை முறைத்த சருக்கத்தும், சிவரகசியபுராணம் சிவரகசியநிருப்பவச் சருக்கத்தும் கண்டு தெளிக.

கீதவருணக் கலம்பகமும்,

மணிகொண்ட கெடுங்கடலில் விறிவளரு மாயவனும்
அணிகொண்ட புண்டரிக மலராத முதுமுனிவ
ரூனக்கண் ணதுகொண்டு காடோ றுணராதே
யேனத்தின் வடிவாகி யெனைத்தின் வடிவாகி
யடிதேடி யறியெனை வலியெலா முழுதிடத்தும்
முடிதேடி வருவெனை மூதண்ட மிசைப்பதத்துக்
காணிய வொருபொருளாய்க் களங்கமற விளங்குபெருஞ்
சோணகிரி யெனநிறைத்த சுடரொளியாய் நின்றருள்வேலாய்,

என்ற விளக்கிற்று. விட்டினு மூர்த்தி பன்றியாகி அடிதேடிஞர் என்பதைச் சில வைணவர் ஒப்பாது வேதப்பிரமாண மிருப்பினும் உடன்படுவேம் என்பவரால், அத்தப் பிரமாணங்களையும் காட்டி யவரைய மயக்கங் கொடாதற்குமாம். பிரமர் அன்னமாகத் தேடினர் என்பதனை வழிப்பாரின்மையின் விடப்பட்டது. அதனையும் சிவரகசியபுராணவுரைகளிலும் தெளிவாக நிறுவியுள்ளாம். மூக்குக் கண்டு கொள்க.

விட்டினுவ பன்றியாகிச் சிவபெருமானது பாதத்தைத்
தேடியுங் காணர் ஆயினர் என்பதற்குப் பிரமாணம்.

இருக்கு வேதம்.

விஷ்ணுர்ஸ்ய வராஹம் ரூபமஸ்தாய, பூமின் விதரயன் ஸஸ்ய
ம்ப மாத ஸுசன - பாதாக் விஷ்ண பரோ பூஷ்வா, தஸ்மேவ மாதாவி

த்மேலப் பிரமி, த்மேலப் பாதாளி, த்மேல ஜியேஷ்டேவி, த்மேல சிரேஷ்டேவி, யமேகம் பகிரகம் வேதர்ஷ்டா பதி, வித்யுதா பதி, சித்தா பதி, காமதா பதி, யமேகம் வேதா, சிவஸ்யஜ்ய மாபகோதி, சிவஸ்யஜ்ய மாபகோதி.

பால்ரா ங்கிதை யென்னும் வேதபாதம்.

ப்ரஹ்மா விஷ்ணு ரஜஸா பத்த வைரௌ மத்யேதமோ த்ருஸ்ய நிஜாத வேதா: வ்தாணுருத்ரம் திஷ்டத் புதய்ய கோப்தா த்ருஷ்ட் வான்தாணு முபாய்ய யுத்தம் பிதஸ்த துர்ரா மஹௌதித்தவத்: வராகோ விஷ்ணோ கிமஜ்ஜ பூமென ப்ரஹ்மோத்பாத பூமிர் நிவாசக் குர்ச.

அதிவன வேதச் சரப உபநிடதம்.

பத்பாதம் போருஹத் துவம் த்வம் மிருத்பே விஷ்ணுஸ்ஸ கலத, த்வாஸ் தத்தியம் மஹேசாதம் வாய்மாத ஸ்தோசரம், பத்தி மாமிந்தரே விஷ்ணோள ப்ரசாத மதரோத் விபு.

விஸ்வபுத்தூர் பாரதம்.

அருச்சுனன் றவதீர்த்தச் சருக்கம்.

"ஓரோன் தனைத்தேட வொளித்தருளு மிருபாத்
தொருவனர்த்த
மோரோன் புனைத்தேழுக் கணைக்களுடன்
புறப்பட்டான்"

"புள்ளுடைக் கொடியோ னிருவரும் காணுப் புள்ளியல்" என்னும் இவற்றினும் மெய்ந்நூலும் கண்டமைக. (கச)

வெய்யகுர் முதரடிந்தசெய்வேற்கைதைதோன்றுத்
செய்யகண் ணுதலுமைத திருமுதகுன்றம்

வய்யமுயிபவண்காசிரிமலிபுனல்வினங்கச்
சுய்யமாமுனிருப்பரீத்தருதிருச்சையம்.

இ-ள். கொடிய சூரபன்மன் முதலிய தகரரைக் கொன்ற செல்லிய வேல்யுதத்திற்குத் தலைவராகிய பழநிப் பெருமான் தோன்றிய சுவத்த அக்கினி கண்ணையுடைய சிவபெருமான் வீற்றிருப்பது விருத்தாசலம், பூமியிலுள்ளார் உய்யும்படி வளப்பமுடைய காவிரி யாற்றின் நிறைந்த நீர் விளக்குமாம அகத்தியமுனிவர் தமது மெல்லிய நாவை விடுத்த இடமாகிய திருச்சைய மலையாகும். (சடு)

தன்வவாணைகைச்சாம்பவியருந்தவங்காண
வினியோர்புறம்பசப்பநல்கிறைவனின்றனிலம்
பளகறுத்தசெஞ்சிறடிப்பன்னிருபுயத்தன்
குன்வீற்றிருப்பதிருக்குலவுசெங்கோடு.

இ-ள். மூன்லைமகர் பேன்ற வெள்ளிய பற்களை யுடைய பார்வதி தேவியாரது அரிய தவத்தைக் கண்டு மனமினிதி (தமது திருவருளில்) ஒப்பாதி பகலம நிறமாகும்படி (அவர்க்கு இடப்பாகத்தைக்) கொடுத்த சிவபெருமான் வீற்றிருப்பதும், (எமது) வெல்லிய வினைகளை நீக்கிய சிவத்த குறமிய திருவடிகளையும் பன்னிரு திருப்புயங்களையு முடைய குமாரப் பெருமான் எழுந்தருளி யிருப்பதுமாக வள்ளல தழுகுளைக் குன் திருச் செங்கோட்டு மலையாம். (கஅ)

பும்புயத்திருமார்பனராயணனிரிதன்
காப்பரிற்பகந்தேன்சொரிகுளிர்பொழிற்கொல்லி
பம்பிரானருள்வினைக்குமீக்கோய்மலையென்று
வப்பர்போற்றுமாலிக்கமாமலையெனுமோங்கல்.

இ-ள். தாமரை மலரின்மேல் இருக்கின்ற இலக்குமி தங்கிய மார்பை யுடையவிட்டினு மூர்த்தியின் காரணை இரும், திருவரை

கொம்பின்கண் பதிய தேனைப்பெழியும் குளிர்ந்த சோலைகளை யுடைய கொல்லி மலையும், எமது கடவுளாகிய சிவபெருமானது திருவருள் விளங்காநின்ற திருவிடைச்சுரம் மலையும், எக்காலும் தேவர்கள் துதிக்கும் பெரிய மாணிக்கமலை யென்னும் மலையும் உள்ளன. (உ0)

அற்றவர்க்கருள்புரிதிருக்கற்குடியமக்கல்
செற்றமுக்குறும்பினர்தொழுஞ்சிராமலைச்சிகரி
கற்றையஞ்சடைக்கடவுடன்றுதைநற்செவியிற்
சொற்றதூமொழித்தேகின்சுவாமிமால்வரையால்.

இ-ள். ஆன்மபோதம் அற்றவர்க்குத் திருவருளைச் செய்யும் திருக்கற்குடி மலையும், மூக்குற்றக்கினியும் கீக்கிய கடியவராற் றொழப்படுகின்ற சிராமலையும், அழகிய சடைத்தொகுதியை புடைய கடவுளாகிய தமது தந்தையான சிவபெருமானது திருச்செவியிடத்து, அறிவு மாசிய பிரணவப் பொருளை யுபதேசித்த குருபானது பெரிய சுவாமி மலையும் உள்ளன. (உ9)

எருக்கைவேணியனிடத்தினுண்குபரிவெளிருக்கும்
வருக்கைதன்றுருன்றக்குடிவரைமலர்த்தருவி
னிருக்கைமன்னவனிபமகளிளமுலைமுயங்கித்
திருக்கைவேற்கின்றையிருப்பதுதிருப்பரங்குன்றம்.

இ-ள். எருக்கம்பூ மாலை யணிந்த சடையையுடைய சிவபெருமானிடத்தில் அழகிய குமாரப் பெருமானும் இருந்தருளும், பலாமரங்கள் நெருங்கியுள்ள குன்றக்குடி மலையுளது, பூக்கள் செறிந்த ஐந்தருவீழ்வினை விளக்கும் இந்திரனது குமாரியாகிய தெய்வயானை யம்மையாரது இளமை பொருந்திய தலைக்கிளை யணைந்து, திருக்கைகளின்கண் தரித்த வேலாயுதத்திற்குத் தலைவர் ஆகிய சண்முகக்கடவுள் அமர்வது திருப்பரங்குன்றமாகும். (உ0)

கண்ணெராயிரமேற்கொகரண்பரிதாமெம்
மண்ணருரையிலுத்தகண்ணுதிரண்டைடோன்
விண்ணருதகார்வினைவன்விற்றிருப்பதுபூர்
தண்ணெருவிலிப்பழமுதிர்சோலைவேதண்டம்.

இ-ள். ஆயிரக்கண் கொண்டு காணுதற் கரிய எமது பரம்பிவனது நெற்றிக் கண்களினின்றும் அவதரித்தருளிய பன்னிரு திருக்கண்களை யுடைய வேலாயுத மூர்த்தியும், ஆகாயத்தினின்றும் நீங்காத மேகம் போன்ற திருமேனியை புடைய மாயவனும் பெருமையோடும் அமர்ந்தருளும் யானைகளில், பூமியின்கண் குளிர்ந்த தேனைப் பொழிகின்ற பழமுதிர் சோலை மலையாகும். (உக)

தாதுதாற்றபூந்துளிபொதுளியகமிழ்தலைச்சூர்ச்
சோர்நொடிகூற்றஞ்சுடர்மணிவேலேலன்
கிதவர்பொழிலுடுத்தழுதூர்த்திருச்செந்தூ
ரோதநீரலைவாயிலோர்கந்தவெற்புளதால்.

இ-ள். மகரத்தை யுதிர்க்கின்ற புட்பக் கொத்துக்கள் தொறும் இயல்பாகவுள்ள தலைமையை யுடைய குரபன்மன் முதலிய மாமரத்தை ஒருகணப் பொழுதுட் பிளக்க ஒளிபொருந்திய அழகிய வேலாயுதத்தை ஏந்திய முருகக்கடவுள் எழுந்தருளி யிருக்கின்ற, குளிர்மை யுடைய வீண்டு சோலைகளாற் சூழப்பட்டபழைய ஊராகிய திரைகொண்டு கீர்வளைத்த கடற்கரையிலுள்ள திருச்செந்தூரிலும் ஒரு மலையுளது.

சூரபன்மன் போர்க்களம் விடுத்துக் கடலிடைத் தலைகவிழ் மாமரமாய் நிற்க, அதனை வேல் செலுத்தி யோர் கணத்துட் பிளந்தனர் என்பது சரித்திரம். (உச)

ரம்பனிக்கொருதலைவனதடிமலர்ச்சார்பின்
மேம்படும்பெருந்தவம்புரிகுமுனிமேவுற்

தேம்பொதிந்தசந்தனமணந்தமிழோதிந்திரனேத்தும்
பூம்பொதும்பரிற்றனையருந்தன்றலம்பெறுதியம்.

இ-ள். உமா தேவியார்க்கு ஒருகாயகமாள இவ்வெருமானது திருவடி மலர்களே யடைவது குறித்து மேம்பட்ட பெரிய தவத்தைச் செய்யும் அகத்திய முனிவர் இருக்கின்ற, இனிமை மிக்க சந்தன மரங்கள் தமிழோசைக் கலக்கு மொலியையே சோலைகளிற் பரவிச் செல்லுந் தென்றற் காற்று வீசுகும் பொதியமலையுமுண்டு.

சம்புவின் பவனி-சாம்பவி அங்குட்ட வினையினையே உருவுடைய காதல் பதிக் குமரனி வென்ப. (உ)

தெருக்குறும்பலமுனிவருமமருகோரிடை
திருக்குறும்பலகலைகளாலேத்திவீழ்ந்திறைஞ்ச
மருக்குறும்பலவளைத்தனிர்க்கரத்தினோர்வாமன்
திருக்குறும்பலவருக்கொளுந்திரிகுடாசலமே.

இ-ள். தெருக்க மூற்ற பல இருடியர்களுந் தேவர்களும் முன்றின்று உறுதிப்பொரு ளிருக்கப் பெற்ற பலகலைகளாலும் துதித்து வணங்குகின்ற, பக்கத்தில் இருக்கின்ற பலவினையல்களைத் தரித்த தனிர் போன்ற கரத்தினை யுடைய பார்வதி தேவியாரும் ஒப்பற்ற அழகினாகிய சிவபெருமானும் அழகிய குறும்பலா வருவம் கொண்டு விளங்குந் திரி குடாசலமு முளது. (உ)

கலி விருத்தம்.

செங்கதிர்மணிமுடிச்சேரலன்மிகழ்
கொங்குவன்னுட்டிடைக்கொன்றைவார்சடைப்
புங்கவன்குமரவேளுறையும்புன்னிலத்
தங்கவெற்புனசிலசொல்லுவாமரோ.

இ-ள். கெட்ட ஒளி பொருந்திய இரத்தினங்கள் குயிற்றிச் செய்த பீடத்தைத் தரித்த சோராசன் விளங்கா நின்ற கல்லை கொங்கு காவிழலே கொண்டை மலையைத் தரித்த நீண்ட சடையை யுடைய சிவபெருமானும் குமாரக் கடவுளும் வீற்றிருக்கும் உயர்வுடைய புண்ணிய மலை களு மிருக்கின்றன. அவற்றைப் பற்றிச் சொல்லுவாம். (உ)

மண்முழுவஞ்சுமந்தோரனிபத்தும்பரும்
விண்முழுபொருளுருவதுவெண்ணைமால்வரை
தண்முழுதருகாசினிற்றயங்குசங்கிவெண்
குழையினனுவந்துகொடுமுடிக்கிரி.

இ-ள். மேகங்கள் தவழுகின்ற எஞ்சி பினையத்திலே தேக்கு மரும் விரும்பின்ற பொருளைத் தருவது பெரிய திருவெண்ணை மலையாகும். வயல்கள் பொருந்திய காசைகரத்தில் விளங்காநின்ற வெள்ளிய சங்கக் குண்டலத்தை யுடைய சிவபெருமான் இருப்பதுகொடுமுடி மலையாகும். (உ)

ஞாதவமிரியுமாருதிரன்னிரின்
மொய்தவம்புரிருமுனிசெங்கிரி
வைகதிர்வேலினண்ருதமாமலை
செய்தவாவனக்ருதென்சேரியத்திரி.

இ-ள். வஞ்சனைகள் ஆகமும் விதத்தை தினைத்து, நன்மையுடன் தெருங்கி தவத்தைச் செய்கின்ற அகத்திய முனிவரது நீண்ட மலையும், தரித்த ஒளியைக்கொண்ட வேலாயுதத்தை யுடைய குமாரக்கடவுளது பெரிய மருதமலையும், தவஞ் செய்கின்றவர் வழிபடும் தென் சேரிக்கன் அத்திரி மலையும் உள்ளன. (உ)

தொல்லிலைப்பாகர்பெருனின்குழலின்
வில்தெழுபுனிமுடிவெள்ளியங்கிரி

நல்லெழிணன்முகநவிரம்பூந்துழாய்
மல்லலந்தொடைப்புயல்வண்ணன்மார்பினவர.

இ-ள். பெரிய இடபவாகனத்தை உடைத்தென்ற பேரும் ஆகாசத்தில், ஒளி பொருந்திய அழகிய கொக்கினை யுடைய வெள்ளிமலையும், நிறைந்த அழகுடைய நான்கு முகங்களுடைய பிரமனிலையும், பொலிவையு வளப்பமுடைய அழகிய மாலையைத் தரித்த மேகம்போலுமான திருமால் மலையும் இருக்கின்றன. (கூ)

கோலநன்மணிமுடிகுலவிமார்பின்மூக்
காலணிந்துலகெலாந்தாங்கிநின்றமால்
போலகல்விசும்பொரீஇப்பொலிவுகொண்டதோர்
மாலிவெள்ளருவிதாழ்வராகமாகினி.

இ-ள். அழகு பொருந்திய நிறைந்த இரத்தின கிரீடம் தரித்து, மார்பிடத்தே உபவீதத்தை யணிந்த உலக மெல்லாவற்றையும் உண்டு நின்ற திருமால் ஆனவர் அகன்ற ஆகாயத்தை விட்டு இறங்கி வந்தாற் போன்ற பொலிவை யுடைத்தாய வரிசையான வெள்ளிய அருவி தாங்கு கின்ற பெரிய வராகமலை யுளது. (கூ)

ஆயதோர்கிரியுதக்கடித்தசாரலின்
மாயவனசலமொன்றுண்டுவாயுதிக்
கேயதாற்குரோசமென்றிசைக்குமாயிடத்
தாயவெள்ளோதிமன்சுரும்பொன்றுண்டரோ.

இ-ள். அவ்வாறாய வராகமலைக்குத் தெற்கின்கணுள்ள பரங்கரில் விஷ்ணுமலை யொன்றுளது. வாயு நிறைந்திய வட்டமேற்றில் நாற் குரோச நாமமென்ற சொல்லுமிடத்தில், சுத்தமாய வெள்ளிய பிரம னது மலை யொன்றுளது.

மாயவன் - கருநிறத்தை யுடையவன். குரோசம் - கூப்பிடு தூரம். ஆயிடை என்பது வழியைச் புணர்த்த சொற்சிறப்பு. ஆ-இடை என்பன ஆயிடையெனப் புணர்ந்தன. "வடவேங்கடந் தென்குமரி - யாயிடைத் தமிழ் கூறுநல் லுலகத்து" எனத் தொல்காப்பியப் பாயிரத் துக் கிரந்தம் வந்தமை புணர்க. சுருப்பு-மலையின் பரியாயப்பெயர். (கூ)

உரைத்தகேழலங்கிரிக்குதவிணைம்மலர்
விரைத்தடந்தாமரைப்பொருட்டுவேதியன்
வரைத்தலம்தன்குணபாலின்மாமறைச்
சிரத்துறைவினுருச்சிலம்பொன்றுண்டரோ.

இ-ள். சொல்லப்பட்ட வராகமலைக்குத் தெற்கின்கண் அழகிய பூமியை யுடைத்தாகின பொருந்திய பெரிய தாமரைக் கொட்டையின் மேலிருக் கின்ற பிரமனது மலைக்குக் கிழக்குத் திசையில் பெரிய வேத சிரசின்கணிருக்குள் கெபெருமானுடைய இருவருவமான மலை யொன் றுளது. அரோ - அசை. (கூ)

தொன்னெடுநாளினிற்சுருதிவேதிய
னன்னரின்வலுத்தநவிரம்பாவினுக்
தன்னிகரில்லதுசத்தியென்றொரு
மின்னிகர்வரையொடெதிர்ந்துமேயது.

இ-ள். பழைய மூற்காலத்தில் வேதத்தில் வல்ல பிரம தேவன், நன்மையாகச் சிருட்டிசெய்த மலைகளியாவற்றினும் தனக்கு வேறொன்று மொப்பில்லாதது, சத்தியென்ற சொல்லப்படுகின்ற ஒரு மின்னலை யொத்த மலையோடு விளங்கி யிருந்தது. (கூ)

புலனிவிண்ணளக்கரும்பொலிவுகொண்மொ
தவர்புகழ்சத்தியோரிடந்தரித்தொரீஇ

நவைதவிர்குமரவேணிவெள்ளைவகலாற்
சிவம்லிசிவனேயேசிவணினின்றது

இ-ள். பூமியிலுள்ளவர்களாலும் ஆகாயத்திலுள்ளவர்களாலும் அளத்தற்கரிய பொலிவைக் கொண்டு, பெரிய தவத்தை யுடைய முனிவராற் புகழப்படுகின்ற சத்திமலையைத் தன்பக்கத்திற் கொண்டு, குற்றங்களே (அசுரரையே) விட்டொழிய குமரக்கடவுள் கலியிடத்தே யிருத்தலாற் சிவமலியென்னும் அத்தமலை கைலாசமலையே போன்று நின்றது. (கூ0)

மஞ்சளமதிரதிவனைத்துமாமறை
யஞ்சனமலிமுறவானமீதுரீஇ
யெஞ்சலிற்சேயொளியிலங்கலாற்சிவ
னஞ்சடைகடிப்பதுதிகழ்சிவாசலம்.

இ-ள். இன்னும் விளக்காகின்ற அச்சிவமலை எத்தன்மைய தென்னில், மேகத்திற் சஞ்சரிக்கும் பாலசந்திரனையும் கங்கை யாற்றையுந் தரித்து, பெரிய வேதங்களில் வல்ல பிரமனும் அன்னத்திற் பொருந்தி, ஆகாயத்தின்மேற்சென்று வளர்தலையும், இவ்விரு நதி விளங்கலாலும், சிவ பெருமானது அழகிய சுபர்த்தமென்னுஞ் சடைமுடியை யொத்து விளங்குதலாலும்.

மஞ்சு=மேகம், அஞ்சன்=அன்னவாகன முடையவன். அஞ்சம்=அன்னம். ஹஞ்சம் என்னும் வடசொழி அஞ்சம் என்றாயிற்று. அனம்=அன்னம். (கூக)

மையறுமெரியொளிமணிவிளங்கிவான்
வெய்யவனுபதிமிளிர்கண்மேன்மரீஇத்
தய்யசெவ்வேற்கிறைதோன்றலாற்சிவன்
செய்யதண்ணீயதுதிகழ்சிவாசலம்.

இ-ள். பழநித்தலத்தே விளங்காகின்ற சிவமலையால்வது, குற்றமற்ற அக்கினியும், ஒளி பொருந்திய மணியும் (இரத்தினக்கல்) விளக்கப் பெற்று, சிறந்தநீலமணிச் சந்திரனும் விளங்குந் தன்னிடத்தில் மருவப் பெற்று, சத்தமாகிய வேலாயுதத்திற்குத் தலைவராகிய சுப்பிரமணியக் கடவுளுந் தோன்ற பிறலினால், கைலாசமலை சிவத்தன்மை கண்ணேயும் பெரியது கைலாசம்=சிவமலை மலை. சிவம்=அசைதலில்லாதது.

தெற்றிக் கல் அக்கினி பாதலின் "மையறு மெரி" என்றார், கல்லின் இடத்துக் கருமணி விருத்தலால் "நிறமணி விளக்கி" என்றார், சூரியரதிய லலச்சண்ணிருப்ப, சந்திரனோ இடஞ்சண்ணிருப்பின் பிரப்பது "அக்கினிக்கண்ணுலால்" வான் கொடிய நுமிதி பிளிந்த கண் பெண் மீதி" என்றும், குமரசுவாமி தெற்றிக்கண்ணிடத்தினின்றுந் திருவதாரஞ் செய்தலின் "வேதனை தோன்றலால" எனவுங் கூறினார். பரிதி=மருவி. சொல்லினாடைபோட. (கூக)

குருமிமணிவளைத்தோடுகுண்டல
மருளிருட்சுடர்நெடுங்கண்வயிரவ
னருளதிருவிதந்தருலலாலன்
றிருமுருகனிகாலதுதிகழ்சிவாசலம்.

இ-ள். பொன்னிறமும் இரத்தினக்கலும், கபிலருடனே கலை கூறும் பொதுமனைவொருத்தி, சூரியன் சந்திரன் அக்கினி யென்னுந் தினசுடர்களும் நீண்ட தன்னிடத்தில் விளக்கப் பெற்று, ஆகாயக்கங்கையாகிய அருள் பொருந்திய ஆற்றின் அருவியைக் கொண்டு நிற்றலினால் தன்னது திருமுகத்தை யிரப்பதாலும்.

குருமி - தலம். எனக் கொள்க. தலம் பொதுமனை எனது. பிரகாரத்தை யுடையது. அன்=பாகத்தியைக்குறிக்கும். "உயிர்க்குள்

மலைமெடிக்க வாலே யுயிர்க்கு - நுபிர்க்கு மரினனுமே குண்டி
என்னுஞ் சுவசமயநெறித் திருக்குமரா துணர்.

சிவபெருமானது திருமுகத்திற்கு உரைக்குங்கால், வெள்ளிட
கிரத்தினையுடைய இரத்தினைகள் குயிற்றப்பட்ட அழியதோடும், குண்
டலக்கனும் பொருந்தி, நிரிசுடர்களாயிய நீக்கண்களும் விளங்கி
ஓங்காய கங்கையையும் உள்டாக்கி பருநந்த சிவம் என்க.

சிவபெருமானது திருக்கண்களே ஓர் திருவிளையாட்டி விமித்தம்
உமையம்மையார் திருக்கைகளால் மூடவுலகமெல்லாம் இருளையிற்று.
அதனால் இறைவன் நெற்றியில் ஓர் திருவிழியைத் திறக்து ஒளிசெய்
தான். அதனால் பிரிப் பயமடைந்த இறைவி கையினை பெடிக்க, அச்
சுகைகளின் விரல்களினின்றும் சிந்திய வியர்வைத் துளிகள் கங்கையாகப்
பெருகி உலக மெங்கும் பரக்க வருதல் கண்டு, பரமன் அதனைத் தற்
சடையிற் நிவலையாக்கிக் குடினர். இக்காரணம் பற்றி 'அருணகிரியரு
தத்தருளால்' என்றார். (கூ)

அத்திரியடைகுநர்க்கருள்சுரத்துவெய்
ஞக்கிரியுரினனினியகாதலன்
கொத்திரிதரவுபிர்குடிந்தவேலினன்
மைக்கிரிவண்ணமான்மருகன்வைகுமே.

இ-ள். அந்த மலையை யுடைத்து பூசிப்பவர்க்கு, திருவருளைப்
பெருகவளித்து, கொடிய கைம்மையாயிய யானைத் தோலையுடைய சிவ
பெருமானது இனிய குமாரரும், (குசபன்மனை) மாமரம் உலவுதம்
படி அதனிரைப் பருகிய வேலாயுதத்தை யுடையவரும், கருமலை
போன்ற திருமேனியை யுடைய விட்டுணுவின் மருகருமாயிய சுபிர
மணியப் பெருமான் எழுந்தருளியிருக்கும். (கூ)

ஆங்கொருசார்திருவாவினன்குடிப்
பாங்கார்முருகுதொல்பதிபவானிகோற்
றேங்குகுளிலவனமோதிலன்றியுன்
கோங்குர்வனமதென்றனதுகூறினம்.

இ-ள். அச்சிவமலைக்கு ஓர்பக்கத்திலே மூச்சொல்லப்பட்ட திரு
வாவினன்குடியென்னும் தலமுனது, அதனேபழைய திருத்தலமாகும்.
அதன்பக்கத்து உமாதேவியார் தவஞ்செய்துபார்த்த கூவிள வனமும்,
சொல்லுகிறது கோங்க வனம் என்னுந் தலமும் உள்ளதென்
பதனுஞ் சொன்னேம். (கூ)

பேதுறல்கவற்றுளாபெருமையாவையும்
கூறுதுமக்குமேற்கோலமால்வரை
மாறில்சீர்வளம்பலவுளவுக்கரி
தின்மாதவிர்விலனம்புவாமரோ.

இ-ள். முடிவில்லாத தவத்தை யுடைய முனிவர்களே! பெரும்
பேற்றை யுளிக்கும் அத்தலங்களின் பெருமைகள் எல்லாவற்றையும்
நமக்குப் பின்னர்ச் சொல்லுதும். பெருமைபொருந்திய வராகமலையி
னிடத்து ஒப்பில்லாத சிறப்பும் வளப்பங்களும் பலவுள்ளன. அவற்றை
யெல்லாஞ் சொல்லுதல் இயலாது, சிலவற்றை மாத்திரம் கூறுகின்
றேம். கேட்பீராக வென்று சூதமுனிவர் சொல்லராயினர். (கூ)

திரிச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம்—எக.

சுவாமி.

வேலுமயிலுந்துணை.

இரண்டாவது,

வாகை திணைச் சருக்கம்.

கலிவிருத்தம்.

மின்றிகழ்வேணியும்வெள்விடையூரும்
மென்றும்மையெயிலெரிவேண்டுவெற்பையோர்
குன்றெறிவேணியேகுறும்பலதோ
தென்றிசையிரசதகிரியென்பதே.

இ-ள். மின்னலைப் போல விளங்குஞ் சடையையுடைய சிவபெருமானும் வெற்றி வேலாயுதப் பெருமானும் எக்காலும் வீற்றிருக்கின்ற வாகை நிலை, வேறோர் மலையுடனே பொருத்திச்சொல்லும் நூன்மைத் தோ? தெற்குத் திசைக்கணுள்ள வெள்ளியங் கிரியென்றே புலவர் கூறுவர்.

வேணியுன் வேணி எனவிருதி விகாரப்பட்டு நின்றது. இம்மரபு பார் இயைபாகு பெயரெனக் கொள்க. (அ)

உருவெழுதருமையினுயர்ந்தூசுசேர்
பொருள்வழிபயிறருமம்புனிதர்நல்கிவா
னிருநிலநிலைபெறவிசைவிளக்கலா
லருமறைப்பொருளொடவ்வசமொத்ததே.

இ-ள். தனது வடிவத்தை வெளுதற் கேலாத தன்மையினுயர்வும், அத்தன்மைக்கு தன் பொருளிடத்தே பயிற்சிசெய்யுந் தொழும்பி

சுத்தத்தைக் கொடித்தல், மேலுலகத்தும் பெரிய நிலவுலகத்தும் நிலை பெறும்படி புடம் விளக்குதலால் அரியமைதப் பொருளுடன் அம்மையும் மொப்பாய் விளங்கியது. (உ)

செய்யசெம்பொன்னிறத்தினிதகன்றுகிண்
டெய்யவையுறுதலத்தகைதனின்றியே
வெய்யவெம்பரந்தண்மேல்விளங்கியேற்றலால்
வய்யகநிகர்வதுவராகமால்வரை.

இ-ள். அழகிய சிவந்த பொன்னிறத்துடன் திண்மையாற்றானும் பருத்து நீண்டு அழகிய யுகமுதலிய நான்கினையும் பொருள்களையும் மனித்து, ஆகாயத்தினின்று, கொடிய சாட்டங்கள் மேல் இடைவிடாத்தலால் பூமியை நிகர்ப்பது அடுத்தெரிய வராகமலை.

இரண்டாவதையும் ஏற்றிருக்கிறது வராகமலையென்று கூறவந்த நூலாசிரியர் முதலிற் பிருதிவியை யொத்ததென்று கூறினர். பிருதிவி பொன்னிறமும் நிலையும் நிலைபெய் யுகமுதலிய நான்கும் ஆகாயத்தினின்றும் அட்டாசாக்களின் மீதும் இருத்தலால் மலைந்து உவமையாயிற்று. நடை - மலை செல், தாவிபம். (ஊ)

ஏரிருளலவன்வான்மீனினஞ்செறி
காரறலனிபனவன்கலத்தெழு
மீபோர்வுகொண்டுதண்டமீபிற்கலால்
வார்தனனேர்வதுவராகமால்வரை.

இ-ள். அழகிய தேன்கூடு, சந்திரன், நட்சத்திரக் கூட்டங்கள் தொகுகிய கரிய மணல், சிறிய நீர்ப்பாடனையுள்ள காடுகளுங் கலக்கப் பெற்று, பெருக்கிய பெரிய வெள்ளத்தையு முடித்து, சேமிக்கையுஞ் செய்து விளங்கலால், நீண்ட நீரைபொட்டமுபெரிய வராகமலையாகும்.

நீருக்கு உவாக்கு மிடத்து, அழகிய இருண்மின், மண்டி, கரு உடைய வேறு மின்கூட்டங்கள், தொகுக்கிய கருமணல், விரும்பத்தக்க

தன்னப் பறவைகள் என்னும் இவை கலந்திருக்கப் பெற்று, ஏழுவள் ளல் மாரை யொத்த வளங்களைக் கொண்டு குளிர்ந்த இடம் விளங்கும் நீர் என்க. இதனால் அட்டபுரத்தை யமைத்தார். (ச)

அறுதொழினெரிடபாதலால்வளர்ந்
தறுமுதிரையனமுட்கோடவாலன
மறுவிலகுறமனைவழங்கலால்வினை
தெறுமெரிபுரைவதுசிகரமால்வரை.

இ-ள். கொழுஞ்சினை யுடைய பெரிய மராகமரமானது, அற்ற தொழிலையுடைய முனிவர் வசித்தலாலும், மேலெழுந்து மிருந்த கல வுணவுகளை யுட்கொள்ள லாலும், உள்ளே தெருக்கள் விளங்கும்படி வீதிகளைக் கொடுத்தலாலும், இருவினைகளையு மழிக்கின்ற அக்கினியைபு மொப்பதாகும்.

அறு தொழினெர்=கொலைத் தொழில் செய்யும் வேடர்; ஆறு தொழில்களையுடைய பிராமணர் முதலினோர். கூலம் ஏழனை—நெல்லு, புல்லு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி, எள்ளு, கொள்ளு, பயறு, உழுந்து, அவரை, கடலை, துவரை, மொச்சை என்னும் பதினைந்தாம்.

"நெல்லுப் புல்லு வரகுதினை சாமை
யிறுக்கு தோரை யிராகியெண் கூலம்."
எள்ளுக் கொள்ளுப் பயறுழுந் தவரை
கடலை துவரை மொச்சை யென்றுங்
குட்டிவை முதினைக் கூலத் தனைவே.

கூலம் பதினெட்டெனைத் தென்பாருமுளர். அதனை, "அத்தனர் வேள்வியோ டருமறை முற்றுக - வேந்தன் வேள்வியே டியாண்பேல வாழுக - வணிக ரிருநெறி நீணிதி தழைக்க - பதினெண் கூலமு முழவர்க்கு மிழுக" என்னுஞ் சூத்திரத்தாலறிக. இனி வாணிக நாடக

துசிர்பரும். அக்கினிக்குரைக்கு மிடத்து, ஆறு தொழில்களை யுடைய பிராமணரிடத்து விளக்கமும், முதினை பலவு கொள்ளுதலும், உள்ளே மறு வினைக்கு மண்டபம் வழங்கலும் எரிக்கும் என்க. (டு)

சேயுயர்சிகப்புப்பாச்செறிமிகிற்றலா
லாயபல்லுடற்குயிராயுளித்தலா
லோய்வருதிருகுகோட்டிரசியூர்தலால்
வாயுவைவிகர்வதுவராகமால்வரை.

இ-ள். மிகவு முயர்ந்த தூணம் பூமியென்னு மிவற்றில் நெருங்கி யுயர்ந்து நிற்றலாலும், நகுந்தலசரீரங்களுக்கும் உரமாயிருக்கையைக் கொடுத்தலாலும், ஒய்தலில்லாத முதலிய கொம்பர்களை யுடைய மான் மேற் செல்லுதலாலும், வாயுவை யொப்பது, அவ்வராகமலை யாகும். (எ)

கந்தரநிரைநிரைகவினிக்கங்கைகீர்
சுந்தரமுற்றனிதோன்றிவானவ
ரிந்திரன்முதலியபதங்களேய்த்தலா
லந்தரமணியதவ்வனிகொண்மாலினை.

இ-ள். மேகக் கூட்டங்கள் வரிசையாகவொத்து, கங்கை நீரானது அழகாக மிகவு மூற்பவித்து, தேவர்கள் இந்திரன் முதலினோரு பதங்கள் பெற்றதனால் அழிய அத்தப் பெரிய மலையானது தூயபத்தை நிகர்த்தது. (ஏ)

தொண்டலம்பொற்கச்சனமருந்திற்கொண்டது
கண்டவர்கள்ளங்கவர்காட்சித்தாயது
முண்டகம்முடியுமுயிரினுதலா
லெண்டருகதிக்கொருமலர்மியன்பலே.

இ-ள். மேகக்கினை அழகிய தச்சினைப் போல இடையிற் கொண்டுள்ளது, தரிசித்தவர்களது கன்மங்களைக் கொள்ளை கொள்ளும் தோற்றத்தை யுடையது, பிரமன் இறந்தாலும் தான் அழியாமல் நிற்பது, மதிக்கத் தகுந்த உயர்குதிக்கு ஒரு எல்லையைப் போன்றதென்று கூறுவர் புலவர்.

"எண்டரு கதிர்க் கொடு வேணி யென்பவே" என்னும் பாடம் அற்றுணைச் சிறப்பன்று. (அ)

எழசீர்க் கழிநெடிலடி யாசிரிவிருத்தம்

முத்தொழிலினர்பேரெழிலுருவாக
முதலுறுமம்புகன்றதொன்மமுமுங்
கத்திகைமலர்ப்பூங்கடுக்கையுந்திருச்செங்
கட்டிலில்வீற்றிருத்தலாதியு
மொத்தநிந்தையராய்ப்பதினெருகோடி
யுருத்திரர்வழிபடுமருந்
மத்திகீள்வனவெண்ணுவலுங்கூட்
டலிணகர்வினக்குபுகடமும்.

இ-ள். படைத்தல், காத்தல், அழித்தலென்னு மூன்று தொழில் களையுமுடையபிரமன் விட்ணு ருத்திரன் என்னு மூன்றுதேவர்களின் பெரிய அழகு பொருந்திய வடிவமெனப்படும் அரசமரமும், முதன்மையான நிலவுலான போதத்தைப் புகலுதற்கிடமாய் நிலமாகும், மாலை போன்ற மலையையுடைய பொன்னிறமான கொன்றை மரமும், திருச்செங்காட்டிலே (சிவபெருமான்) வீற்றிருந்தருளும் ஆத்திமரமும், ஒற்றுமை முடையராய்ப் பதினெருகோடி யுருத்திரர்கள் வழிபடுமருதமரமும், நீண்ட திருவாசைக் காவிலுள்ள வெள்ளை வேலும், அழிய மதுரைப் பதியிலுள்ள பொன்னிறமான கடம்ப மரமும். (க)

ஒற்றியூர்மகிழ்ந்தற்பினைபொருவர்க்
குதவுமூர்மருவுபாதிரியு
நற்றவர்க்கிலையார்வந்தருங்குலவு
நலங்கெழுபராய்த்துறைப்பராயுஞ்
சற்குருவெனச்சங்காணுறைருருத்துஞ்
சம்புவாவின்றபைங்கழையும்
பொற்குரும்பலவுஞ்சண்பகாடவியும்
பொதியமேற்சந்தனாடவியும்.

இ-ள். திருவொற்றியூர்க்கணுள்ள மகிழமரமும், கருங்கல்லைத் தெப்பமாகக் கொடுத்த திருப்பாதிரிப் புலியூர்க்கணுள்ள பாதிரி மரமும், நல்ல தவத்தினரும் கலைஞானங்களை யுடையவரும் விரும்பிய முள்ளியமும், கன்மை பொருந்திய திருப்பராய்த் துறைமிக்க ணுள்ள பராய்மரமும், சற்குருவாகச் சிவபெருமான் எழுந்தருளியிருந்த குருந்த மரமும், சிவபெருமானைத் தோற்றுவித்த பெரிய மூங்கிலும், அழியாத குரும்பலாவும், சண்பகக் காடும், பொதியமலைக்கணுள்ள சந்தனக் காடும். (கூ)

[illegible]ர்கீர்வஞ்சியுங்கரையுர்
[illegible]னியும்பொன்னிகுழ்ருவண்ணத்
[illegible]புலியதனுள்வதியும்பேரர்ச்
[illegible]த்தருமையுற்றிகழெருவினு
மூன்றுகாஞ்சிவினிற்காஞ்சிதண்மருந்து
முதலியிசோற்றிருத்தியமாவும்
பின்பவள்கன்னிகாமகீள்வனத்திற்
பெருந்தவம்புரிந்தகாவினமும்.

இ-ள். கிடைத்தற்கரிதாகிய கருவூர்க்கணுள்ள குணமுள்ள வஞ்சியும், திருக்கரைபூரிணுள்ள வண்ணி மரமும், காவிரி சுற்றி யிருக்கும் கொண்

ಪಕ್ಕಣಗಳುಳ್ಳ ಇಲವಂತ ಮರಮುಂ, ಮೇಲಿಂ ಗಿಂಪಮ ಮೆಂಬುಂ ಗುಲಕ್ಕ
ಳುಳ್ಳ ಪೆತ್ತಮೂವೆಯುಂ ವಿಳಕ್ಕುಗಿನ್ರ ಪುಳಿಯುಂ, ಮುದನ್ಮೈ ಪೊರುಂದಿಯ
ಕಾಂಡಿತ್ ತಲೈತಿರುಂಡ ಕಾಂಡಿ ಯಣಿತ್ತ ಸಿಲ ಇಡೈಯ ಪುಡೈಯ
ತ್ತಿರವಿ ತಳುವ್‌ಸೆಯ್ತಿರುತ್ತ ಇನಿಯ ಮಾಮರಮುಂ, ನೀಂಡ ನೋಂಕಲವನೈ
ತ್ತಿರ್ ಪೆರಿಯ ತವತ್ತೈಚ್ ಚೆಯ್ತ ವಿಲ್ವಮುಂ. (೫೫)

ಮಾಮಣಿಕ್ಕತಿರ್‌ವೇಲ್ ಮುರುಕನ ತಿರುವಾ
ಲರಿಚ್ಚಿನಿವೇಲ್ಕೈಯುಂಬುತ್ತಣ್
ಡೇಮಲರ್ತ್ತಿರಡೋಟ್‌ಚೆಚ್ಚೈಯುಞ್ಚೆಂಗೆಟ್ಟಿಕ್
ಕೋಡಲುಞ್ಚಿರುಮಲರ್‌ಕ್ಕುವಳ್
ತಾಮವೆಣ್ಣಿಯನ್ರುಳನಿನೆರ್‌ಪೊಲಞ್
ಞಾಣ್ಣಿಳಙ್ಕಾಞ್ಚಿಯುಮುದಲ
ಕಾಮರುವೆಯ್ವತ್ತರುಕ್ಕಳುಮಕವಾಣ್
ಕಪ್ಪಗವನಂಕನುನೆರುಂಗುಂ.

ಇ-ಳ್. ಸಿಗಪ್ಪ ಅಮಿಯ ಒಳಿಯೊರುಂಗಿಯ ವೇಲಾಯುತತ್ತೈತ್ ತರಿತ್ತ
ಕಂದಕ್ ಕಡವುಳಿನ್ ಉರುವಾಯ ಶುದ್ಧಮಾನ ಪೊನ್‌ಪೋನ್ರ ತೊಂಬರ್‌ಮಿ
ಯುಡೈಯ ವೇಂಗೈಮಲರುಮುಂ, ಪೊಲಿವಾಗಿಯ ತಣ್ಣಿಯ ವಾಸಪ್ ಪೊರುತ್ತಿ
ಟುಂಬಂಗಳಿ ಯುಡೈಯ ವೆಂಬಿಯುಂ, ಇಳಂತ ಪಿಗಪ್ಪತ್ತೈ ಯುಡೈಯ ಕಾಂಡುಮುಂ,
ಚೆಲಿಯ (ಮುರುಕನ್ ತಿರುಪ್ಪುಗಳ್‌ತ್ತಲಿತ್ತ) ಮಲರ್‌ಕಳ್‌ಕೊಂಡಿ ಯಾಡುಮಯಿಲುಮುಂ,
ಕೊನ್ರೈ ಮಾಲೈಯೈತ್ ತರಿತ್ತ ಸಡೈಯೈ ಯುಡೈಯ ಈಶಪೆರುಮ್‌ತಿಯಿನ್ ತನ್
ಮಿನಾರ್ ಪೋಲುಂ ತಣ್ಣಿಯ ಒಳಿಯೈ ಯುಡೈಯ ಕಾಂಞ್ಜಿಮರಮುಂ, ಇವೈ ಮುತ
ಲಾಯ ಅಮುದು ಪೊರುತ್ತಿಯ ತೆಯ್ವತ್ ತಣ್ಮೈಯೈ ಯುಡೈಯ ಮಂಗಳುಂ ಇಂ
ದಿರನೈ ಕಪ್ಪಕಚ್ಚೋಲೈಕಳುಂ ತೆರುಳ್‌ಕಾಣಿತ್ತರುಂ. (೫೬)

ಅನ್ರಿಯುಂಬಸುಂಗಾಯ್‌ತ್ತಾಮ್ರಿನಂಗಮುರು
ಮಕರುವುಮರಿತಕಿಚ್‌ಚಿವುಳ್
ತುನ್ರುಮುಪ್ಪುಡೈಕ್ಕಾಯ್‌ತ್ತಾಳೈಯುಳ್ಳುರುಕ್ಕುಞ್
ಞರುಕ್ಕಮುಮಿವರಿತರುವ

ಮಿನ್ರವಳ್‌ಸಿನೆಟ್ಟಾಯುಮಾಶಿನಿಯುಂ
ವಿಳವುಮಾಮಲಕಮುಮುರುಕ್ಕುಂ
ಪೊನ್ರನುಂಬಲಾಸುಮಿಂಗುಮುಂಬುಗುಂ
ಪುನ್ನೈಯುಞ್ಚಾದಿಯುಮತಲುಂ.

ಇ-ಳ್. ಇವೈ ಮಲ್ಲಾಮಲ್, ಪಸಿಯ ಕಾಯ್‌ಗಳ್ ಪೊರುತ್ತಿಯ ಕುಲೈಗಳೈ
ಯುಡೈಯ ಇಣ್ಣಂಗಮುಂ ಮಂಗುಲುಂ, ಅಲರ್ ಮರಂಗಳುಂ, ಕದಿರ್‌ಕಾಯ್ ಮರಂ
ಗಳುಮುಂ, ಕೊರುಕ್ಕಿಯ ಮೂನ್ರು ಪಕ್ಕಂಗಳೈ ಯುಡೈಯ ಕಾಯ್‌ಗಳ್ ಕೊರುಕ್ಕಿಯ
ತಾಳೈ ಮರಂಗಳುಂ, ಬಿಟಲಿ ಮುದಲಿಯನ ಬಿಡಿತ್ತ ತೋಪ್ಪುಗಳುಂ, ಕುಂ
ಗುಮ ಮರಂಗಳುಂ, ಸೋದಿ ವಿರುಕ್ಷಮುಂ, ಒಳಿ ವೀಸುಂಬಿಯ ಕೊಂಬೈ
ಯುಡೈಯ ಕಾಂಬುಳ್‌ಕೊಂಡ ಬಲಾಮರಮುಂ, ವಿಳಾಮರಂಗಳುಂ ವೆಂಬಿಯುಂ
ಮುರುಕ್ಕ ಮರಂಗಳುಂ ಅಗಲ ವಿಳಕ್ಕುಂ ಪುಲಾಲ ವಿರುಕ್ಷಮುಂ, ಅಗಿಲಾದ
ಮುಂ, ಪುಂಗುಮಂಗಳುಂ ಪುನ್ನೈಯುಂ ಸಂಬಗಮುಂ ತತ್ತಿಮರಮುಂ. (೫೭)

ಸಾಲಮುಞ್ಞಿಮಾಶೋಟ್ಟಮುಂತೆರುಂ
ತಮಾಲಮುಂಗತಲಿಪುನ್ನಾಗಮುಂ
ಕೋಲಮುಂಕಾಯತ್ತಿನಿಯುಮಂಡಿಯುಂ
ಕೂವಿಳಂಗಮುಂಬಿಲಕಮುಮುನಿಯು
ಮೇಲುಞ್ಞಿಂಗೋಣಿತಾಮರಮೊಡಿವು
ಪೀರ್‌ತ್ತಿಯುಂಗನಕಮುಂತಕರು
ತೂಲುಂಗಿಯ ತಾವರಂಗಳುಂಕೊಡಿಯು
ಮುಂಡಕಾತಿಕನುಮಂಗುಲವಾಂ.

ಇ-ಳ್. ಆಚ್ಚಾ ಮರಮುಂ ಚೆಂಕರುಂಗಾಲಿಯುಂ ಉಂಣ್ಣತ್ತಂ ಗುಗಿಲ ಮರ
ಮುಂ, ವಾಳೈಯುಂ ಸಾಮರಮುಂ ಅಳಿಂಜಿಲುಂ ಕರುಂಗಾಲಿಯುಂ ಮಱ್
ಱಮಿಯುಂ ಮುಲೈಮಲ್ಲಿಗೈಯುಂ ಮುಂಜಾಡಿಯುಂ ಅತ್ತಿಮರಮುಂ, ಏಲಮುಂ, ಕಟ
ರತ್ತಿಯುಂ ಓಡಿ ಎಂಬು ಮರಮುಂ ಇತ್ತಿಮರಮುಂ ಪೊಂಮರಮುಂ ಪುಂಮುರುಕ್
ಕುಂ ವೇರಾಯುಳ್ಳ ತಾವರಕ್ಕರುಂ ಕೊಡಿಗಳುಂ ಮುಳ್ಳಿಚ್ ಚೆಡಿ (ಅಲ್ಲತು
ತಾಮರೈ) ಮುದಲಿಯವುಗಳುಂ ಅಮೈಯಲಿಕ್ಕ ಇನ್ರನವಾಂ. (೫೮)

தைத்தவத்திரஞ்சத்திரத்தணித்திடி
சல்லியகரணியுத்தணியாக்
கைத்தனசத்துபுரைந்தசந்தான
கரணியுரணமுத்தழும்பு
மொய்த்தனகீவித்தனைமைசெய்சமான
கரணியுமுழுந்தபல்லுயிரு
மெய்த்தாகைதோதும்வந்துயிர்ப்பனபுரியு
மிதசஞ்சீவினிமருந்தும்.

இ-ள். அத்திரங்களுஞ் சத்திரங்களுந் தைத்தநனு துண்டாகிய புண்களை மாற்றி மருந்தாகிய சல்லிய கரணியும், துணிபட்ட உறுப் புக்களைப் பொருத்தும் மருந்தாகிய சந்தான கரணியும், விசயக்களை யுந் தழும்புகளை முன்னைய உறுப்புக்களிற் றடவிச் சமஞ்செய்யு மருந் தாகிய சமனிய கரணியும், இறந்தபோன பல உயிர்களையும் உடம்புத் தொழிலோடும் பொருத்தி யுயிர் பெறச் செய்யும் சஞ்சீவினி யாகிய சஞ்சீவினி மருந்தும்.

பிங்கலநிகண்டு மாப்பெயர் வகை.

சல்லிய கரணி சந்தான கரணி
சமனிய கரணி முதலி லுரித்த
மிருதசஞ் சீவினி மருந்தாகல் வகையே.
வித்தக வத்திரஞ் சத்திரத் தனிக்கு
செய்த்தரு மருந்தே சல்லிய கரணி
துண்டமான் முறுப்புத் துணியினைச்
சந்துசெய் மருந்தே சந்தான கரணி.
விரணமுத் தழும்பு தீக்கி மெய்யினைத்
தன்மைசெய் மருந்தே சமனிய கரணி
யுயிர்தரு மருந்தே மிருதசஞ் சீவினி. (கடு)

விருத்தர்கல்லினைமையாவதுமினைஞர்
விருத்தராவதும்புரிதக்க
தருக்கனும்புகலும்வல்லியுமுதிர்ந்த
சருகுகல்லெனவலிபுனலுங்
கருத்தினினினைந்தவர்க்கருமிய
சூலியுங்காயமேவலியத்
திருத்துபன்மருந்துங்குருதிப்பந்தடரு
முதலியதிகழ்வனசெரிக்கே.

இ-ள். மிகவர் கல்ல இளமைப் பருவத்தை யடைவதும், பாலியப் பருவமுடையவர் இழவராவதும் செய்யத் தருக்த மாந்தரும், சொல்லப் பட்ட கொடிமருந்துகளும், உதிர்ந்த சருகுகளும் கல்லென வலிபெறத் தக்க நீரும், மனத்திலே நினைந்த வாக்களைக் கொடுக்கும் அரிய மூலி களும், சரீரம் வலிமையுமம்படி திருத்துகின்ற பலமருந்துகளும் இரத் தத் தடாகங்களும், இவைபோன்றன பிற விசேடப் பொருள்களும் தெருவில் (அம்மலையில்) விளங்குவன வாகும். (கசு)

எழுசீரடிச் சந்தவிருத்தம்.

தீவினைப்பல்லுசையகாரியவரூர்திக
ஞசாவிவிகோபரும்பொருசார்
மாயன்விழிகூரனையும்மனமும்மிலன்முருகன்
வாகனமுமேவுமொருசார்
தூயமதிவேணியுடையாயதும்மென்னேதுமுறை
சூதுரைதுமேயுமொருசார்
மேயபரன்மார்பனியும்வேழமுகனார்தியும்
விரளியனேசேருமொருசார்.

இ-ன். இவ்வாறுள்ள சாகமலையின்மேல் கல்வி அறிவு பழுதிலர் என்னும்படியான வாகனங்களையே சிக்கம் யானை யென்னுஞ் சொன்ற சகன்னி விரும் ஒருபக்கத்தில் விசேபமென, இருவாச்சி அதிதுவில் புலியும் பாம்பினங்களும் முருகக்கடவுளது வாகனமயில் மயிலினங்களும் ஒன்றித்திற் கூடியிருப்பவைபோலும்; சுத்தமான சந்தனச் சேறுத் தரித்த சடையையுடைய சிவபெருமானது உடையாகிய புலித் தோலைக்கண்டு வெள்ளிய எருதுகளும் தாக்கா நிருக்கின்ற இடங்களோ நாம் மேல்வரை யென்றுத்தனர். தன்மைக்கேடாகும் பொருந்தி விருந்தின்ற சிவபெருமானது மார்பில் அணிக்கப்பட்ட காசுக்களும், பாம்புகளும் ஒரேதாயகக் கடவுளது வாகனமாகிய பெருச்சாளியினைக்கண்டும் ஒன்றோடொன்று சண்டைசெய்துகொண்டிருந்தே போகைக்குள் விக்கும். (கச)

ஆதலவட்டத்திரதமேழ்புரளியூடிசெலு
மல்லதனின்மிதாடவார்
சீதபநியோர்புடைபசும்பொழிலுலினை
மோதிவெளிந்திதழ்மான்
மீதுசெறிசோலையில்வினாருவொழுகு
மினைனின்விவிதியு
மாதவருஞ்சிறுவாணருமிழ்திதாருமை
கூவையவாசமுயல்வார்.

இ-ன். குயில் செறுத்தலின்ற தேரித் கட்டப்பட்ட குதிரைகளும் (அம்மலையில்) மிகவே செல்லுவ தன்றி அதன்மேற் சேறன இவ்வியானை குவிச்சி பொருந்திய சக்கரம் பகல்காலத்தே (அம்மலையின்) நிழற்கத்தே படிக்கவி விளங்கவேறு ஒன்றுபத் தோன்று நிற்கும். மேலேயுயர்ந்த சோலையில் வளப்படும் சுட்சத்திரக் கூட்டங்கள் தேனைழுகுகின்ற புட்பங்களேபோல விளங்கி விருக்கும், பெரிய தாழ்ந்த முழங்கும் நீண்ட வேல்களும் பிடித்தி கொண்டு ஐவினாலை பதினாயிரவர்க்கு வாசஞ்செய்யப் பிரயத்தனபோர். (கஅ)

தானநிலகரஅருமாமணிவராகெடி
மாமுனிகடாம்வளர்தலாத்
காந்மடவாரருகுசேர்வரமாமகளிர்
காமர்சுனையாடவருவா
ரேனமிடியோனினிதிருளறவமோனினிதி
யாமுமுணவேண்டுமெனவே
வானமுனைவாரிகிலேகுதிபிரிவார்கருவு
வார்தகருவார்தினமுமே.

இ-ன். கல்லசிறந்த இரத்தினங்கள் பொருந்திய நீண்ட பெரிய மாசுமலை வளர்தலினால், காட்டிலுள்ள பெண்கள் (சுவர்க்கத்தின்) அருகை யடைவார். தேவமகளிர் தமிய கணவின்கண் நீராடவருவார், தினைமாவா கல்லது, கூட்டிலுள்ள தேனே கல்லது காமுன்ன வேண்டு மென்று, சுவர்க்க லோகத்துள்ள அமிர்தத்தை (கையில்) வாரி விலை கூறுவர். (தினைமா தேன் முதலிய வற்றை) காடோறும் கொண்டு விவார் உண்பார். (கக)

வேறுதுமாமணியினுமணிவீர்மறு
வினங்குருவிந்தமணிவீர்
கூறுபோர்புனிர்புனிர்குவிர்தழுபொன்மாளிகை
குலாவியுறையிரிதணின்மீ
தேறுவிரைமணிபொறுடைலெகல்லதிரு
வீரெனவிகழ்ந்தகைகூர்
மாறில்குறமாதரையணங்கினியத்தையரி
தென்றிவைவருத்துனைதெய்வார்.

இ-ன். குற்றமுள்ள குன்றினில் தரிக்கும் குறத்தியினை, வேறாயுள்ள கல்ல சிறந்த இரத்தினமாலையை விதோ தரியுங்கள்! தழைகளைத்

தரிக்கும் கீர்த்தன் கூறையை யுடிப்பீராக, பானின்மே லேறும் க
பொன்னும் செய்த மாளிகைகளி லேறி யுலாவுவீராக என்று, இ
னைக்கனியும் பீதாம்பரங்களையும் மிகுதியாகக்கொடுத்து எம்வீட்டி
வருவீராக வென்று விசுவாசி செய்து குறமுறைவல்லுத்த நூப்பின்
குறப்பெண்களை, தேவமகளிர் அழைத்தும் (அவர் செல்லாமைப்
னைவியிரியற்கையாதலின் வருதல் அரிதென்று எடுத்துச் சொல்வா

கொய்தினைநறுங்குரலிவிழுங்கிளிவருந்தமனி
யின்குழலைவளரிருவே
பெய்துகவலைச்சியொருசாரிபமருப்பரை
பிறங்குறவெருக்கினரையே
யொய்யெனவிடிப்பர்சிறையியலையவிப்பருழை
யின்றசையரிந்துசிறுக
கொய்யெரிமடுப்பர்நறவந்தனினோப்பர்குற
வாணருடனே றுகருவார்.

இ-ள். முறிக்கப்படுகின்ற தினைகளின் கல்ல கதிர்களில் விழுந்
கிளிகள் வருந்தும்படி. இரந்தினைக் கதிரை வாரிக் கவணின் க
யிட்டி எறிந்து, ஒருப்பக்கத்தே யானையின் கொம்புகள்போன்ற தன
னால் (தம் கரபகர்) செருக்க அரைவளைசையாக விளையாடிப்
இருகுறவர் யுடைய எச்சுகட்டம் அஞ்சுதலிலிக்குவார், மானினது இறை
சிலைகளிரித்து மிக்க கொம்தான அக்கினியிற் காய்ச்சுவார், தே
னைப்பார் (தம்கயுகாய) வேடுருடனே உண்பார் (குறமகளிர்

மன்றைமரிக்குருதிபெய்துதினையோடலின்
வின்பெயிற்நருனிரவிய
கன்னலரைபன்னமினைவைத்தனபடைத்தழலி
லவிநதும்புகையிடாச்

செவ்னிறவிழிக்கனிதும்பொருவுசெக்கலை
சேவலைதுளிமயிலும்
பன்னிருபுயக்கடவுண்முன்னரின்னிதிற்றிதிர்
பரானிவெரியாடல்புரிவார்.

இ-ன். ஆட்டின் மார்பிலுள்ள சிவந்த இரத்தத்தைப் பலியிட்டு, இனமானுடன் புட்பங்களினின்றும் கொண்டுவந்து வண்டுகள் கடி னைத்த தேனையும் கள்ளு, சுரைக்குடன் (தேக்கு) இவை முதலியவற் றில் வைத்துள்ள ஆவகளைப் படைத்து, அலங்கரித்த மினனது கள்ள புனுகை யிட்டு, சிவந்த நிறமுற்ற கண்களையும் முருக்கமலரை யொத்த சிவந்த தலைக்குடையு மூடைய சேவலினோடு, நிறமுகளே யுடைய மயில் பதினைகளையும், பன்னிரண்டு திருப்புயங்களையுடைய குமரக் கடவுளது திருமுன்னர் விரைந்து கோறல் தகுதி, வெறியாட்டைச் செய்வார்கள். (உட)

சிறையர்வெண்கவடிமாலையர்சிறார்கள்கை
வெம்புலிமடங்கலுறையின்
வீறுருவுனாத்திரள்கயந்தலைபிடிப்பர்கொடி
வீக்குவர்விடுப்பர்பழுதி
மாறுபுரியாதுவினையாடுவர்களாருவிழு
முக்குவர்கைகால்விழிகொள்வா
ரேறுபொருவித்திரிவர்காளையருடற்பலியை
யப்பணியெடுப்பர்விடுவார்.

இ-ன் சிறந்த கல்லை யுடையராய், வெள்ளிய சேடுகோலை யணிந்தவருமான. வேட்டுவச் சிறுவர்கள், கோடருள்ளகொடிய புலி சிங்கம் மான் என்னும் இவற்றின்குட்டித் திரள்களையும் யானைக் கன்று களையும் பிடிப்பர், கொடிகளாற் கட்டுவர், பின்னர் அவிழ்த்து விடுப்

பார், அவையோடு பழநி மாமுனை கொடுஞ்செய்கைகள் செய்யாத வர
வியோடுவர், நிறபறையை யடிப்பார்கள், கை கால் கண் எண்ணிவி
றைக் கொள்ளுவர், இடம்போலச் சேருவித் திரியும், காஞ்சிட்டரு
முடைய வேடர் உடுப்பினது புற்றென்ன (கையை வேட்டி) பாம்
கினை பெயிட்டர், அவை பாம்பாயிருக்கக் கண்டு விடுவார்கள். (உ

கல்லருவியோதைபுனலாடுமோர் தமோதைதகரை
யேனுமோர்தமோதைதழுதினைக்
கொல்லையினெழுங்கிளியினுதைதகடியோதைதினை.
யோதைதகலணைதருதலைச்
சொல்லினோர்தமோதைதினைகொய்யுமவரோதைதழை
தோகைமயிலோதைதையெதிரே
செல்லசனியோதைதமுரசோதைதவளர்மோதைதமலை
வாணர்சிலையோதைதயுமறு.

இ-ன். அவ்வாசை மலையினிடத்தே, கல்லென்று மொலியோ
விழுகின்ற அருவியின் ஒலியும், கிரின் முழுதுவார் ஒலியும், கானவி னே
வார் தொனியும், கூவுங்கள் விளையுங் கொல்லைகளி னின்றும் எழுகி
களின் குரலும், அவர்தம் அரத்துவாரோசையும், மாலிலுகன் (ம
றேறொன்று உரோஞ்சலா லுண்டாகுஞ்) சத்தமும், கவண் எ
தலா லுண்டாகுமொலியும், முழவினொழிகிய வசனிருஞ் சிறார்களி
குரலும், தினைக்கதிர் கொய்வார் குழலியும், கிரிச்சுறைகள் தோ
யாரினைகளின் முழக்கமும், அதற்கு மாறாக இடிக்கும் இடியின் முழ
மும், முரசவாத்தியங்களி லெழுமியும், மலையின் எதிரொலியும், ம
கண் வாழும் வேடர்களை வில்லையுமையும் எக்காலும் கேக்கலாம். (உ

பூசலினிவ்வேவலைவென்றினைமாதுவர்போ,
ரினைவிடார்தன்படையார்
நேசமிறலையடையிலாமுதமேயனையர்
மேலைவரம்புமுடையார்

தேசபொலிதேவர்சிறைமீளவடிவேல்விடுசெவ்
வேளலதுதெய்வமதியார்
வாசமலர்தூவிவழிபாடியரிவாள்பணியின்
மீள்வர்மலைவாணர்திறனே.

இ-ன். இன்னும் அம் மலைக்கண் வாழும் வேடரது வலிமையைக்
கூறுபடுத்து பேரென்ற கேட்பின் உடனே பகைவரை வெற்றி
கொண்டு தன்தோபத்தை நீக்குவர், அந்திப்பொழுக்கமாட்டார், ஓய்க்து
நிலையுலத் தங்கமாட்டார், தடைப்பட்டில்லார், அன்பு பொருந்த (ஒரு
வர்) அவரை யடைவாராயின் அவர்க்கு அரிய அமிர்தம்போன்றவராவர்,
நீண்ட உலகவாழ்வையுஞ் செல்வத்தை கண்மையு முடையர், பிரகாசம்
மிக்க தேவர்களை சிறை மீளும்படி வேலாயுதத்தை ஏவிய கந்தசாமியே
யல்லாது வேறொரு செய்வத்தை யுபாசமாட்டார், அக் கடவுளே மண
முள்ள தெய்வமென்று வழிபாட்டைச் செய்வர், அதுசெய்தே தன்
தொழிற்குச் செல்வர். (உ)

அன்றுவினுள்விழிசெனீர்சொரியவாளிகொ
டகழ்ந்ததமதங்கணைவார்
வென்றிபுனதின்னர்குலமென்மையுடையார்திருவி
ரும்புமடமான்மகளைமுன்
மன்றல்புரியும்படிசெய்மிவண்முருகனுக்குதவு
மாமலர்பராசரல்வதிவார்
நன்றறமலாதுபுரியார்தமைலாதுமுப
லர்கலமிலாததுசொலார்.

இ-ன். அந்த காளில் திருக்காளத்தி யப்பரது திருக்கண்ணி வின்
றும் இரத்தஞ் சொரிய (அதனைக் கண்டு பொறுமல்) தம்பிரான் தோன்
றித் தம்கண்ணை யவர்க்குச் சாத்திலவரான, அவ்பரமப் புலப்பத்தைக்
கனி தெரிந்து கொண்ட தின்னைரரி என்றுக் கண்ணப்ப நாயனாரை

குலத்திற் பிறந்த பெருமையை யுடையவர், இலக்குமியின் விருப்பத்தக்க இளமை யுடைய மானின் மகளாகிய வள்ளியம்மையாரை முன்னர் விவாகஞ் செய்யுமாறு சேர்ந்த வேளாகிய முருகக் கடவுளுக்குக் கொடுத்த மாதவரை முனிமனை யுடையவர், மேற்சாலில் இருப்பவர், நன்மை யான அறச்செய்கையைச் செய்வதன்றி வேறு வழிகளைச் செல்லாமர், தவமல்லாத வேறொன்றற்கும் முயற்சி செய்யார், கன்மை யில்லாத தை ஒருசாலும் உரைக்கமாட்டார். (உஎ)

கலி நிலைத்துறை.

ஏனமால்வரையடைகுநர்யாவரேயெனினும்
வானநாடவர்வழுத்தவும்வாழ்த்தவுந்தகுவார்
ஞானவாலகில்லியர்முனிவரர்சித்தர்காசர்
கானவிற்றொழிற்கின்னரர்கடவுளர்தொழுவார். (உஅ)

இ-ள். பெரிய வராகமூர்த்தியை யடைவோர் யாவரேயுமிருப்பினும், அவர் தேவலோகத்தவரால் வணக்கப்படவும் துதிக்கப்படவும் தகுதியை யுடையராவர், அறிவினை யுடைய வாலகில்லியர், முனிவரர்கள், சித்தர், சாரணர், இசையை யுடைய கந்தருவர், வித்தியாதரர், கின்னரர் முதலிய கணங்களாலும் வணங்கப்படுவர்.

வாலகில்லியர் - அறுபதினாயிரம் இருடியர். வித்தியாதரர்=மாலி, காஞ்சன முதலிய வித்தையைத் தரித்தவர். (உஉ)

இயக்கர்சாரணர்கர்வசுக்கள்யோகேசர்
மயக்கமொன்றிலர்முதலியர்வைகுவர்தேவர்
வியக்கமாநிக்கரையில்லெண்பளிக்கறைமீதி
லையக்காண்மதிக்கடையினாபருச்சனைசெய்வார். (உக)

இ-ள். இயக்கர்களும், சித்திபெற்றோரும், சாரணர்களும், வசுக்களும், யோகேசர்களும் ஒருமயக்கமும் இல்லாராய் முதல்வரை யுற்று இருப்பர், தேவர்கள் வியக்கும்படி பெரிய ஆற்றின் கரையில் வெள்ளிய

பளிங்கறையின் மேல் விருப்பமுற்று, புதிய பாலசந்திரனைத் தரித்த சடா முடியை யுடைய பெருமானை அருச்சனை செய்வார்கள்.

பிரமதேவன் படைக்குங் காலத்திலே கோபமும் பிரியு முடைய ராயினர், அப்போது அச்சத்தைக் கொடுக்கும் மீசையும் தாடியு முடைய சாம்பிராசவடிவினராய்ச் சிலர் தோன்றினர். அவருட் சிலர் பிறைமதி யைக் காற்றது பிரமதேவனை (பகுமம) உண்ணுவேம் என்று பார்த்தனர். அவர் (பகுமர்) இயக்கர் எனப்பட்டார். சிலர் (சகுமம) காப்போம் என்றார். அவ்வாறுள்ள அவர் அசுக்கர் எனப் பெயர் பெற்றார். இவ்வாறு கூர்ம புராணம், விஷ்ணுபுராணம் என்பவற்றிற் கூறப்பட்டது. (உஅ)

அண்ணலஞ்சினகாக்களுமுளவுளவருளி
தண்ணறிக்குழாம்பலவுளவுளதடஞ்சூழ்ந்து
மண்ணியாறிசைக்கருணைவிழுக்கிரிமேலாறும்
வெண்மதிச்சடைவிளங்கியகக்கைவீற்றிருக்கும். (உக)

இ-ள். அம்மலையிற் பெருமையிற் சிறந்த கோயிலருகும் பலவுள, அருவிகளும் பலவுள்ளன, குளிர்ந்த தூற்றுக் கூட்டங்களும் பலவுள் ளன. பெரிய சுனைகளும் பலவுள, அவற்றை யடைத்து தேவர்களுக்கு விருந்தை மிகவுங் கொடுத்து, வெள்ளிய சந்திரனுவாழ் சடைக ளுள்ள கங்கையானது நின்றோறும் தங்கி வீற்றிருக்கும். (உக)

நீர்மலிவேலியனீடருளோரைபந்
தார்மலிவேந்துதலப்பயனேதண்
கார்மலிசாரலெழுந்ததுகாசி
லோமலிகின்றபொன்னின்வடிவோர்மான்.

இ-ள். நீர் நிறைந்த திருச்சடா முடியை யுடைய சிவபெருமானது திருவருளோ, பரிய மாலை விளக்கிய கௌசலராசனுடைய தவத்தின் பிரயோசனமோ, மகிழ்ச்சி பெருகுதற் கிடமான குற்றமில்லாத பொன் னிறமான வடிவத்தை யுடைய ஒரு மானுனது குளிர்ந்த மலைச்சார லின்கணின்றும் தோன்றிற்று. (உடு)

கண்டனர்பின்புதொடர்ந்துகவண்மே
பெண்டகர்போலவணின்றுபெயர்த்தா
ரெண்டிசைகாவலவீண்டொரிறும்பூ
ணண்டதுகேளெனவொண்கைகுவித்தார்.

இ-ள். அரசனது சேனைகள் அந்த மானைப் பார்த்து, அதன்பின் னர்த் தொடர்ந்து சென்று, அது அகப்படாமையால் வருந்தி, பேடிகள் போல அவ்விடத்தினின்றும் திரும்பினவராய் மன்னனிடம் வந்து, எட் டுத் திக்குகளுக்கும் காவலாயிருக்கும் மகிபதியே! இவ்விடத்து ஓர் ஆச்சரியம் இருக்கின்றது. அதனை (தயைகூர்ந்து) கேட்குதி என்ன அழகிய தமது கையைக்குவித்து நின்றனர். (உசு)

கொம்பொளிறஞ்சனதேர்தற்கல்சென்னிக்
கொம்புமெய்க்கான்குமுழந்திகழ்கோலம்
பைம்பொற்றிமான்வெருள்பார்வையிங்கே
வம்பவிழ்பொங்கரின்வந்ததையென்னூர்.

இ-ள். இவ்த பொன்னிறமும், வெண்ணிறமுமுடைய கேசரியும், சுரத்தின்கணுள்ள கொம்பர்களும், கான்கு முழங்கை யுயரமு மு மும், பசிய புள்ளிகளும், வெருண்டபோக்கமும் உள்ளே ஓர்மான் வசனிப்பதற்கு வனத்தின்கண் வந்தது ஐயனே! என்று கூறினர். (உக)

வேட்டமினழுப்பவர்மாற்றம்விண்முழக்கே
சேட்டெழின்மார்பினைசென்றதுகண்டான்
வாட்டமினம்விஞையவெளவுதுமென்னுக்
கோட்டிலில்வாளினைக்கொண்டுதொடர்ந்தான்.

இ-ள். வேட்டை யாடுதலைச் செய்பவரது சொற்சனி முழக்கைக் கேட்டு, பெருமை பொருந்திய அழகினைக் கொண்ட மார்பினை யுடைய கௌசல ராசனும் போய் அதனைப் பார்த்தான், வாதமில்லாத அச்ச மானது அவர்வேமென்று வினைத்த விசையும் அம்பையும் கையிற் கொண்டு தொடர்ந்தனன். (உக)

சாவதுகாலஃதோர்கண்மாகப்
போவதுவானகமோபுவியோகால்
பாவுவதோவுழைபார்மனனேவு
மேவதுபோழுதுமேழ்வைதாவும்.

இ-ள். இந்த மானுனது கான்கு காதவழியளவு ஒரு கணத்திற் குள்ளாகத் தாண்டிச் செல்கின்றது, ஆகாயத்திலோ பூமியிலோ இதன் கால்கள் படாமற் செல்லுகின்றன, பூமியின்கண் படுமே வேகமாகச் செல்கின்

றது, எமது அம்பு செல்வதற்குமுன்னர் ஏழ்மலைகளையுந் தாண்டிச் செல்லுகின்றது. (உசு)

நெஞ்சங்கொக்குமுளனீணிலவேற்றன்
வெஞ்சமர்வில்லுமிழ்வெங்கணைசேண்போ
மெஞ்சலிசாயகமேருடனேகு
மஞ்சிறுமாருதவைப்பினுமோர்மான்.

இ-ள். மனம் நினைத்தற்றொழிலைச் செய்தற்குமுன் சிலேடையுமிக்க அதிபலையெனுஞ் சேனை, கொடிய யுத்தத்தில் வல்ல வில்லினின்றும் விடப்படும் வெவ்விய அம்புகள் ஆகாயத்திற்செல்லும், அவ்வாறு பாணங்கள் போதற்கு முன்னரே, ஒப்பற்ற மானுனது மேகமண்டலத்தினும் தாவிச் செல்லும். (கூ)

கேழ்கிளராசைதெழிதியசரங்கள்
சூழ்கருமாவலைதோய்த்ததிகாண
னேழ்கிலவேற்றிதழில்லிடமேந்தி
வாழ்கன்னிகாவனத்துளடைந்தான்.

இ-ள். நிறம் விளக்குகின்ற நிருதரோடும் மருவிய பாணங்கள் சுத்திய மாகடலிலிற் சென்றழுந்தியதை ஆபிபலவனுய், சபரி களுக்கும் அரசனுயிய கௌசலமன்னன், அழகுடைய வில்லைத் தனிடைத் தரித்துக் கொண்டு, மான் இருந்த கன்னிகா வனத்துள்ளே சென்றான் (கூக)

அறுசீர்க் கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பல்வகைமம்மராற்றும்பைம்பொன்சாரற்கன்றெம்மல்
செல்கெழுகன்னிகாவனத்திடைச்சேர்ந்தகாலைத்
தொல்லியனினைப்பயன்கன்னவல்வெதுப்புக்குமேல்லை
வல்லியின்மயக்கநல்குமாயையிற்போயிற்றன்றே.

இ-ள். பலவகைப் பட்ட மயக்கங்களைச் செய்த பசிய பொன் போன்ற மானுனது, பெருமையிற்சிறந்த மேகங்கள் நிறைத்த கன்னிகா வனத்தைச் சேர்ந்தபோதில், பழைய விரோதனது பிரயோசனங்களின் அளவை ஆராய்ந்து தொழிற்படுத்தி, விரைவில் மயக்கத்தைக் கொடுக்கும் மாயை யொழிவதுபோலக் காணப்படாதாயிற்று. (கூ)

அவ்வனத்தொருசாரத்தணிமுனின்றுபொன்மா
னெவ்வனத்தகன்றுபோயிற்றினிப்புரிவதியாதென்னுங்
கௌவனப்பகழிமன்னன்கவலுறுகாற்காணுங்கி
மௌவனக்கிராதரும்போர்மன்னரும்வந்துபுக்கார்.

இ-ள். அக்காட்டி லொரு பக்கத்துள்ள அழகிய குளிர்ந்த சோலையி னின்றும் வெளிப்பட்ட பொன்மான் ஆனது, எக்காட்டினிடத்துச் சென்று ஒளித்ததோ? இனி யாம் செய்வது என்னை யென்று, கௌவு கின்ற கூரிய அம்பினையுடைய அரசன் அம்முறுவற் காலத்தில், அக் காட்டை சோதித்து, குறிஞ்சியருஞ் சூடிய வேடர்களும் யுத்தத்தில் வல்ல அரசர்களும் வந்து புகுந்தனர். (கூக)

மன்னரைகோக்கிளிர்வருதிரல்வரிகூவல்
விளிளம்யாண்டுளதென்னுற்குவினைவினிற்போகிநேடிப்
பள்ளரீர்தகும்பிற்பெய்தார்பரிசனமீண்டுமுண்ணக் [போன்
கொள்ளுரீர்கொணர்வான்போலக்கடலினிற்குளித்தான்வெய்

இ-ள். வீரர்களைப் பார்த்து நீங்கள் தடாகத்து, வேறு என்பதி னின் நீர் எவ்விடத் திருக்கின்றது தேடிக்கொண்டு வருவீராக என்று கேட்ட அரசனுக்கு (அந்நீர் கொண்டு வருபவர்) சென்று தேடி, நீர் நிலைக்களுள்ள சலத்தைக் கும்பத்தின் கொண்டு வந்தார், பின்னரும் சேனைகளும் பருகுதற்கு வேண்டும் நீரைக் கொண்டுவரத் தான் தெல் பனைப் போல மேலிச்சமுத்திரத்திற் குளியல் குளித்தான். (கூச)

தீம்புனல்கொணர்ந்தார்தம்மைச்செம்மலுட்டிமெலோதிக்
காம்புறல்லினமென்றேளிகணவனேத்திநாழினல்லாதி
யாம்புனலருந்தேமுண்மினெம்மொழிவழாதுகீவீர்
தாம்புனலென்றுணர்ட்டாரேவவிற்றடையொன்றில்லார்.

இ-ள். இனிய நீர் கொண்டு வந்தவரை யாசன் பார்த்து, அழுபி
மீருகளான கூத்தியும், சிறந்த மூங்கில்போன்ற தோள்களைய முகைய
உமாதேவி தாப்தாயெ சிவபெருமானேட் பூசித்தல்லால், யாம் நீரும்
உண்ணமாட்டோம், சீர்கள் எமது சொற்தவறுதல் கொண்டிலக்க நீரை
யுண்ணக் கடவீர் என்று. கூறி ன், குற்றேவல் செய்வோர் தலை
யொன்று மின்றிப் பருகினர். (கூடு)

காடுறுவேட்டமீதிற்கவலுறுமனங்கொண்டு
தோடிதழியினீற்போற்றுங்கியமுற்றொலிந்திதன்று
வாடுமாசனுள்ளத்தினேப்பிசோமாத்துவான்போ
னீடிணர்விரித்துலெய்போனீர்முகந்தெதிர்வந்துற்றான்.

இ-ள். காட்டிற் செல்லும் வேட்டைத் தொழிலில் மனந் தன்பன்
கொண்டு விரும்பி, அதனும் கொன்றைப்பூ மாலையைத் தரித்த சிவ
பெருமானேத் தியிக்கும் நியமமுங் கேடுற்ற தென்று, வருத்தின்ற
தீரசனுடைய ஆசாசத்தை சீக்குவானேப் போல, மிக பூங்கொத்தக
னேவிரித்து, நீரை மொண்டு கொண்டு சூரியனும் எதிரில் வந்துதித்
தான். (கூசு)

அற்றைநாட்கடிகையங்கொன்றுற்றுவகடன்களாற்றிப்
பொற்றடம்புயக்கோமானும்போவதற்குளம்வாராமை
மற்றதிசயம்பிறந்தகருதிதாடுமனத்தன்பூறி
யொற்றினார்க்கூவிக்கோயிலுளதெனிற்பார்மினென்றான்.

இ-ள். அத்தி னத்தில் விடிய, ஐந்து காழிகைக்கு முன்னரே அரசனெழுந்து தான செய்யவேண்டிய நித்திய கடன்களே யெல்லாஞ் செய்து, இலக்குமி குடியிருக்கப் பெற்ற விசாலித்த கௌசல ராசனும் அக்கோங்க லனித்தை விட்டுப் போதற்கு மனம் வராது, அந்த அதி சயத் தோன்றிய மனத்தினுல் அன்பு மிகுத்து, அதுவரை யழைத்து இவ்விடத்திற் கோயில் இருக்குமாயிற் பார்த்து வருவீராக என்றான் ()

அங்கவரகன்றரண்ணலகத்தினுள்ளிழித்திருந்தா
னுங்குலத்தோன்றனுட்டதலியைவழுத்தக்கோங்கத்
தங்கியவனத்தடைந்தானென்றுமார்த்தாண்டன்மேல்பாற்
றிங்களுக்குவகைசொல்லச்செல்லலிப்போலச்சென்றான்.

இ-ள். அத்தத் தனர்கள் பார்த்தற்குச் சென்றார்கள், பெருமை யிற் சிறந்த கௌசலராசன் றன் கூடாரக்கண் மனம் விழிப்புற்றிருந் தான், நமது குலத்திற் றோன்றிய அரசன் கெற்றிக் கண்ணே யுடைய பரமசிவனே வணங்குதற்காகக் கோங்கமரங்க ணிறைந்த வனத்தின் கண் வந்தனன் என்று, சூரியனுனவன் சந்திரனுக்கு மிழ்ச்சிச் செய்தி சொல்ல மேற்குத்திசைக்குச் செல்வது போல அஸ்தமித்தான். (கூஎ)

ஆபரிடிக்காணர்மீண்டிறைக்கையுப்போழ்திற்
சோலியங்கன்னிகாரவனத்தினன்றோன்றற்காணக்
காலையிற்பெயர்ந்தான்வெய்யோன்யாமினிக்காண்டுமென்னு
மாலையில்வருதல்போலத்தான்றினன்மதியப்புதேள்.

இ-ள். ஆலயத்தைத் தேடித்தேடிக் காணுகவாய்த் தானவர்திரும் பிச் சென்று, அரசனுக்கு அறிவிக்குங் காலத்தில், சோலைகளி னழகு வாய்ந்த கன்னிகார வனத்தி லிருக்கும் சமது வழித்தோன்றலைப் பார்க் கும் பொருட்டுப் பகற்காலத்திற் சூரியன் போயினன், யாம் மாலைக் காலத்திற் போய்ப் பார்த்து வருவேமென்ற வருதல் போலச் சந்திரன் தோன்றினன். (கூக)

மின்னவிர்செக்கர்வானில்விளங்குவெண்பிறையெனச்சை
பொன்னவிர்சடையிற்றோற்றும்பிறையெனப்பொற்றேவைகு
மன்னவற்கன்றுகாட்டிமழவலான்வழங்குகின்று
னின்னதுகாணப்புக்கான்போன்றுதித்தருக்கன்போந்தான்.

இ-ள். மின்னல் விளக்குஞ் சிவந்த வானத்தில் விளங்கா நின்ற வெள்ளிய பிறைச்சந்திரனே, எமது பிதாவாகிய சிவபெருமானது பொன் போல் விளங்குகின்ற திருச்சடையிற் காணப்படுகின்ற பிறையென்று துணிந்திருக்கும் கௌசல ராசனுக்கு அற்றைத்தினம் கோடாதிருந்த பரமர் காட்சி கொடுத்தருள்வர். அதனை யானுங் கண்டே னென்று வந்தவனைப் போலச் சூரியனும் உதயஞ் செய்தான். (சo)

மூத்தினமாயகாலைமுத்தினன்கவிகைமூழற்
றூத்தினமாலோன்வைகுஞ்சூழிற்றுமனைப்பூங்
கூத்தினைமார்பனுதிசைவமாமறையோன்கஞ்ச
னத்தினன்போதினர்க்குநாண்மலர்கொய்யச்சென்றான்.

இ-ள். மூன்றாட் கழிந்தபின்பு, முத்துக்களாலலங்கரிக்கப் பட்ட குடையானது நிழலைச் செய்ய, சூரியனுஞ் சந்திரனுங் சூடிகொண்ட சோலைக்கண், தாமரைப்பூ மாலையையுடைய ஓர் ஆதிசைவப் பிராமணர், தாமரை மலரை யுடைய பிரமனும் விட்டுணுவும் பூசித்த சிவபெருமானுக்காக அன்றலர்ந்த புதிய புட்பங்களைக் கொய்யும்படி சென்றார். (சக)

கண்டனன்பணிந்தான்செம்மல்வினாயினன்கலிநான்மார்பன்
விண்டனனூருமம்பேருமடைந்ததும்விளைத்தார்வேந்தன்
பண்டறும்றைவலாளன்பார்த்தனன்பணிகளாற்றற்
கண்டர்கோன்றெளிற்போந்தவாயனென்றகலுட்கொண்டான்.

இ-ள். அரசனனன் ஆதிசைவப் பிராமணரைப் பார்த்து வணக்கினான், மன்றலை கட்டிய உபவீத மணிந்த மார்பினை யுடைய ஆதிசைவர் நீயாவன் என வினவினர், வாசனை பொருந்திய மாலையைத் தரித்த அரசன்தன்னுடைய வரையும் பேரையும், தான் வந்த காரணத்தையும் எடுத்துக் கூறினான், பழமை யாகிய தரிய வேதங்களில் வல்ல பிராமணர் மனத்தில் ஆராய்ந்து, இருட்பணிகளைச் செய்தற்காகத் தேவதேவரான சிவபெருமானது திருவருளால் வந்த அரசனுக்கு மென்று தம்மனத்து ணினைத்தார். (சக)

மன்னவன்கன்னிகாவனமிதுஞானபூமி
பன்னருமிலிங்கமாகிப்பரப்பிரமந்தானேநிற்கு
நன்னிலைக்கண்ணென்றுன்முன்னிகழ்ந்தனையாவுங்கூறிச்
சன்னிதிதிகழ்ப்பாலோடைதனிற்படிவித்தான்றக்கோன்.

இ-ள். அரசனே கன்னிகாவனம் என்று சொல்லப்படும் இத்தலம் ஞானபூமி யெனப்படும். சொல்லுதற்கரிய இலிங்க வடிவாகிப் பரப்பிரமமாகிய சிவம் வளர்ந்து நின்றது, அத்தலத்தில் நாகு மென்று முன்னர் சடந்தவைகளெல்லாவற்றையுஞ் சொல்லி, அக்கோயிற்சன்னிதியின் பக்கத்தில் விளங்குந் தீர்த்தத்தில் தரசனே முழுகுவித்தார் ஆதிசைவப் பிராமணர். (சக)

ஞானநேரக்கருணிஞானவாய்மையுநன்றுமேத
ஞானதேசிகனுன்ஞானநகுமணிக்கோயில்புக்கு
ஞானநற்குளியைஞானகாட்டமோடருச்சித்தேறி
ஞானவாரிபடிந்தமூழ்கினானெருவின்றான்.

இ-ள். ஞானப் பார்வையைக் கொடுத்து, ஞானத்தின் உண்மை விளக்கனைக்கூறிச் சொல்லிய ஞான குருவாகிய ஆதிசைவப் பிராமண

நால் கௌசலராசன் நெய்மயம் விளங்கும் ஒளியைக் கொண்டு முழுகிய
யோகியுட் புகுந்து ஞான வடிவாகிய லிங்கத்தை ஞானக் கண்ணுடன்
அருச்சனை செய்து, அதித்து ஞானசாகரத்துள் தோய்ந்து அமிழ்ந்தி
கான் என்னும் அகங்காரத்தினின்றும் நீங்கி நின்றனன். (சச)

மெய்ம்மயிர்பொடிக்கவுள்ளம்விதிர்விதிர்த்திரண்டு
கைம்மலருச்சிகூப்பிக்கண்களீர்ருவித்தாழ்ந்து
நெய்ம்மலிமெய்வேலண்ணலினிப்பதனிலைத்துநின்றான்
பைம்மலிமிடற்றோனேற்றில்வந்தெதிர்காட்சிதந்தான்.

இ-ள். நெய் நிறைந்த மூன்ற வேலாயுதத்தைத் தரித்த கௌசல
ராசன், தேகம் உரோமப் புளகிதங் கொள்ள, கம்மென்று, இரண்டு
கரங்களாகிய தாமரை மலர்களையுச் தலேயிற் குவித்து, கண்களி னின்
றும் ஆனந்தபாஷ்பம் அருவி போலச் சொரிந்து, தற்போதநினைப்பின்
றித் திபானித்து நின்றனன், கருமைநிறைந்த திருக்கண்டத்தையுடைய
பரமசிவன் இடபவாகனத்தி லாரோகணித்து வந்து காட்சி கொடுத்
தனர். (சநி)

காட்சியிற்கலந்தமூலமாமனுக்கழுதிநெஞ்சு
ளாட்சியிற்சிருருத்ரமாயிரநாமத்தாலு
மாட்சியிற்துதித்தான்வேட்டவரம்பலவுமுங்கிவள்ள
னீட்சிநன்னெறியிலானெனநின்றுர்ரெஞ்சுளானுன்.

இ-ள். அருள் நூனத்திற் கலந்து நின்று, பெரிய சிவமூலமந்
திரத்தைச் செபித்து, ஞானத்தி லுள்ள அன்பினுலே, சிறப்புப் பொருந்
திய உருத்திர மந்திரத்தினும் ஆயிரநாமத்தினுலும் முறைப்படி அர
சன் துதித்தான், அருள் வள்ளன்மையால் விரும்பிய பலவரங்களைக்
கொடுத்து மீட்சியையுடைய சிவலிங்கத்தி லந்தர்த்தான மாயினர், கன்
மார்க்கத்தினின்ற தொண்டரது இருதய கமலத்தினின்காது நீங்காவான
சிவபெருமான். (சசு)

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

வெள்ளைமால்விடையுகைத்தோன்மிளிர்குறுமறத்தற்பி
னுள்ளமார்வன்கெழுமொள்ளிலைவேலோனேன்கலருள்
வள்ளலவார்குழையன்னிலைவிடையாண்டினதமன்னே
தென்ளருநான்மறைமுனிவரருள்கெனச்சேவடிதாழ்ந்தான்.

இ-ள். வெள்ளரிதழுடைய பெரிய இடபத்தைக்கொடியாகவுடைய
சிவபெருமான், விளங்காநின்ற சிவலிங்கத்தின்கண் மறைத்தருள் பின்பு,
மன அன்பு மிக்க அழகிய இலைத்தொழிலின் முற்றிய வேலாயுதத்தை
யுடைய அரசன், உயர்ந்த இச்சாசக்தியுள் வள்ளக் கொடிபோலும்
நீண்ட காதினையுடைய உமையம்மையாராகிய மெய தவார் எழுந்
தருளி யிருக்குமிடம் எல்லிடத் தனது, தெளிந்த நான்கு வேதங்களில்
வல்ல முனிவரே அருள்வீராக வென; பிரமனாது செல்லிய பாதங்
களே வணங்கினன். (சஎ)

பூபதிகேள்பவானியும்பொன்னியும்பொருந்துகன்னியிற்
றாபதர்கோன்குருவாசன்றமனியவிண்ணவர்வைகு
மாபரனன்கழைத்தேவலிழைப்பவாய்மறைநெறியின்
மாபரனேவழிபாடுபுரிந்துவைகுநாளொருநாள்.

இ-ள். உமை யம்மையாரும் இலக்குமி தேவியினும் அருள்
பொருந்திய கல்வ காவினையுடைய அரசனே கேட்பாயாக, முனிவர்க்
குத் தலைவராகிய குருவாசமுனிவர், பொன்மதிலாகிய தேவர்கள் வசிக்
கும் சுவர்க்க லோகத்துள்ள காமதேனுவின் பிள்ளை எல்லியத்தையும்
நன்மையோடு கருவித்துப் பெற்று, அக்காமதேனு தாமிட்ட கும்தேவல்
லிகை செய்ய, தூரய்க்க வேதவிதிப்படி, மேலான பரம்பொருளாகிய
சிவபெருமானை வழிபாடுசெய்து இருக்கின்ற காலில் ஒருநாள். (சஅ)

நாலமுமித்தடைவதொருகடிகைபிரிக்கடைத்தென்னுச்
சேலமுனிவரன்கினவித்தேதனுவேஷிவபூசைக்
கேவலிடையூறினழத்தாயேலாதுன்பணிபாவங்
கோவினையென்முனேவாராதேருதிகொடியபெண்ணுன்.

இ-ள். பூசா காலத்தை யறிந்து அக்காலத்தில் வரும் காமதேனு, ஒருகாழிகை தாமதித்து வந்த தென்று, ஞான வொழுக்கத்தை யுடைய துருவாச முனிவர் கோபித்து, காமதேனுவே! சிவபூசைக்கே கெடிய இடையூறைச் செய்தாய், இனி உன்னுடைய தொழில் தகாது, பாவத் தைச் சமத்தாய், நீ கொடுமையை யுடையை, ஆதலால் என்முன் வாராது போகக்கடவா யென்றார். (சக)

அம்மாற்றமதுகேளாவழுங்கிநெடிதுயிர்த்திதனுக்
கெம்மாற்றமிசைப்பதெனவிடைந்தநியாமையினிழைத்த
மைம்மாற்றுமுனிவமுன்னிவொழிக்தனியேன்வாழ்வுறவோர்
செம்மாற்றமருண்கெனச்செஞ்சேவடிதாழ்ந்ததுதேனு.

இ-ள். காமதேனு, முனிவர் கூறிய வார்த்தைகளைக் கேட்டு இரங் கிப் பெருமூச்சு விட்டு, இதற்கு என்ன மொழி கூறுவது என்று யோசித்து, அறியாமற் செய்த குற்றத்தை நீக்கும் முனிவரே! தேவரீர் கொண்ட கோபத்தை விடுத்து, எனக்கு இனிய கான் உய்யும்படி ஒரு செவ்விய சொல்லைத் திருவாய் மலர்ந்தருள் வேண்டுமென்று, திருவாசமுனிவரு டைய பாதங்களை வணங்கிற்று. (கூ)

எனவனைநீழல்வைத்தியெல்லாங்கண்ணிகாரவனைக்
தானடையினைச்சார்ந்ததபனிசையொருதடங்கண்
டானதவமுயன்றமலனருளொடுவிண்ணடைந்ததத்தத்
தேனிமிர்பூத்தடந்தேனுதீர்த்தமெனச்சிறந்ததால்.

இ-ள். வராகமலையினடிக்க லிருக்கும் அழகு பொருந்திய கன்னி காரவனத்தை அடைந்து பூஜிப்பாயாக வென்றகூற, காமதேனு வந்து இழக்குத் திசையில் ஒருதடாகம் உண்டாக்கி, கன்மையான தவத்தை முயன்று செய்து, சிவபெருமானது திருவருளைப் பெற்றச் சுவர்க் கத்தை யடைந்தது, அந்தத் தேனிறைத்த புட்பங்களை யுடைய தடாகம் தேனுதீர்த்த மென்று பெயர் வழங்கிற்று. (கூ)

தீர்த்தமதன்றென்கரையிற்செறியலர்க்கடிளைவனத்திற்
பார்த்திபமாதேனுவுலகம்பரித்தபரப்பினியே
மார்த்தவகாஞ்சுமபின்றுவைவிளைதுகொண்டு
கோர்த்தமறைதிருக்காமக்கோட்டமெனக்கூறியவே.

இ-ள். அத்தத் தேனுதீர்த்தத்திற்குத் தெற்குக் கரையில், பொருந் திய பூக்களையுடைய வில்வ வனத்தில், அரசப் பெண் போல உலகத் தைத் தாங்கும் பார்வதி தேவியார் அரிய பெரிய தவத்தை காடோறும் செய்தனர், அதனால் அதனைக் கூட்டமாகிய வேதங்கள் திருக்காமக் கோட்டம் எனச் சொல்லின. (கூ)

இதிருப்யமிபாவருமெய்ததற்கரியதென்றேனை
விதியின்றெல்குலவேந்தன்போற்றிமிளிர்விமலிப்பதப்
பதுமங்காண்பதற்கொன்றுபகர்கெனத்தாழ்ந்தனன்கமல
பதுமென்றர்மறைமுனிவன்வருந்தலென்றருள்வழங்கி.

இ-ள். இது நியாயமாகும். எல்லோரும் அடைதற் கரியது என்று கூறிய ஆதிசைவப் பிராமணரை, பழமை யாகிய சந்திர குலத் தோன்றலாகிய கௌசலசேர மன்னனுக்கு அறிவித்து, விளங்காநின்ற லக்ஷ்மியம்மையாரின் பாதங்களாகிய தாமரை மலரை அடியேன் தரிசிப் பதற்கு ஒருபாயம் உபதேசித் தருளவேண்டு மென்று வணங்கினன். அப்பொழுது தாமரைப் பூ மாலையையுடைய ஆதிசைவப் பிராமணர் அருளாதே யென்ற இரண்டை புரிந்து. (கூ)

எண்சீர்க் கழிநேடிலடி யாசிரிய விருத்தம்.

சாலுமகாகோடமேசத்திகாமஞ்
சக்கரமேபுவனேயாகாசஞ்சத்தி
தோலியகாமஞ்சகலம்புவனேசத்தி
கோடமாதங்கோடசக்கரமேபுவனே
வேலுடைச்செவ்வேள்வினம்பினைக்கானின்று
வித்தியாமந்திரமாமிவற்றைத்தேறு
வாலியதீர்த்தக்கரைபிற்செபிக்கிலுன்பான்
மாதொருமண்டலஞ்செல்காலவ்வுலகத்தாமே.

இ-ன். பொருந்திய மகாகோகமே சத்திகாமம், சக்கரம் புவனே யாகும், ஆகாயம் சத்தியாகும், கொள்ளப்பட்ட காமம் சகல மாகும் புவனே சத்தி கோடம் மாதங்கோடம் புவனேகவரி சக்கரம், வேலாயுதத்தைத் தரித்த கந்தசுவாமி சொல்லும்படி விளங்கின்ற வித்தியா மந்திரமாகும், இவற்றைச் சத்தமில்லாத தேறு தீர்த்தத்தின் கரையிலிடத் திருந்து செபிக்கில் உள்ளிடத்து உமையம்மையார் ஒருசாற்பூ கமோக்குள் தோன்றி நினைத்த வரத்தைக் கொடுப்பார். (இ)

நாலடித் தரவு கொச்சகக் கலிப்பா.

ஆயமறையோனுரையேற்றுயிடையவ்வாறிழைப்பத்
தாயுமுதுபார்ப்பனத்தியுருவுகொண்டுதண்டேறிப்
போயிறைமுன்யாரையுன்னிப்புரிகின்றுய்தவமென்று
னேயுலகமீன்றளித்தவிறைவிசிவனோக்கியென்றான்.

இ-ன். அவ்வாறு ஆகிசைவப் பிராமணர் சொன்ன வார்த்தை களை யேற்றுக்கொண்டு அவ்விட மண்டத்து அவ்வாறு செய்ய, உத்தமாதா ஆகிய உமையம்மையார் மூப்பு பிராமணப் பெண் வடிவம்

கொண்டு, தண்டினை யூன்றிக் கொண்டு தானவனும் சென்று, யாவை நினைத்து இத்தவத்தைச் செய்கின்றாயென்று கேட்டனள். உலகத்தைப் பெற்ற பரமேசுவரியை நினைத்துச் செய்கின்றே னென்று அரசன் சொன்னன். (இஞ)

தன்னுயிரவுங்கேள்விகலனுமாதவத்திறனுந்
தன்னினைக்கேள்வனைத்தழுவுதவம்புரிகின்றனன்பா
லின்னுமெனிவரவரியனவியப்படையாயினிமேன்
மன்னவனிகாண்டியெனமடந்தாண்மாமறையுணின்றுள்.

இ-ள். தாசனே! உன்னுடைய வருகையும், கேள்வி யறிவும் பெரிய தவவலிமையும் கண்டு விருக்கின்றன, அந்த அம்மையானவள் தனது காவலனைச் சேரும்படி தவத்தைச் செய்கின்றன், உன்னிடத்து இம்மைத்தினம் வெளிவருதற்கு அரியன், அன்புடையவனே இனிமேல் திருமணக் கோலத்தைக் காண்பாயாகவென்ற மறைத்தனன்யாயெனில் பெரிய வேற்பொருளாய் நின்றவரையே பார்வதி தேவியார். (இச)

வென்னெழுந்தருளினனென்றுணர்ந்தபரவசமுற்
றன்னவரவுங்கமலப்பொற்றுரைகிழிதீர்ந்த
வென்னையுமாண்டனன்றுமலிவினிதளிகூர்ந்தவென்றே
முன்னிமணக்கானமொழிந்தான்மாதவமுயன்றான்.

இ-ள். தாசருவனவன் எமது அவ்வையார் எழுந்தருளினர் என்ற துணர்ந்த பரவசமும், தன்னையும் மறந்தும், தாமரை மலர்போன்ற சிவந்த கண்களில் ஆனந்த நீர்சொரிய, எல்லையும் அடைக்கப்பெற்றவனாய், சாய்ந்து நிலத்தில் தாசனும் தண்டனென்று, பெரிய தவத்தை முயன்று கொண்டு முற்பட்ட திருமணக் கோலத்தைத் தரிசிக்க இத்தி பேன் என்ற அரசன் வரத்தைச் செய்தான். (ஞ)

சில்பகல்செல்காலமக்நித்தியோர்முனியேழ்வர்
கொல்புலத்தாபதர்கோற்குவனக்குறுகிக்குழகனடி
தொல்பவந்தீரத்தாழுதார்தமிற்சிலர்காப்மலர்கொய்ய
வில்வனைத்தனிற்றேனுதிர்த்தவினிர்கரையடைத்தார்.

இ-ள். வெகாட் செல்லுங் காலத்தில், தெய்வத் தன்மை பொருந்திய மகதி என்னும் வீண புடைத் தாதமுனிவர் முதலிய ஏழுபேரான, புனிதரே வெற்றி கொண்ட முனிவர்கள் கோல்கு வனத்தை யடைத்து, சிவபெருமானது திருப்பாதத்தை, பழைய பிரவிகள் தீர்க்க வணங்கினர், அவரட் தின் காயும் மலரும் கொய்யும் படியாக வில்வ வனத்தின் கணுள்ள தேனுதிர்த்தத்தில் வினங்கும் கரை யடைத்தனர்.()

னகத்கமலர்கொய்வார்கன்னியர்பலர்வைகிடச்சுற்றுஞ்செங்
ஙகக்கதிர்வேற்குரிசிறவம்புரித்தருள்கண்டதிசயித்தார்
தெக்கணநோக்கினரமுதசீதனவொண்ணிலவொருங்கு
புக்கெனவோம்கொளிவிளகுபொலிவுகண்டுவெருவினரே.

இ-ள். கைக்கு அழகிய புட்பக்கூடைக் கொய்யும் முனிவர்கள், கன்னியர்கள் பலர் இருக்கும் இடங்களையும், இந்த கையிலுள்ள ஒளி பொருந்திய வேலாயுதத்தைத் தரித்த கந்த சுவாமி தவத்தைச்செய்ததையும் பார்த்து ஆசசியத்தனர், தென்றிசையைப் பார்த்தனர், அங்கே அமிர்த மாலை குளிர்ந்த அழகிய மீனக்கூட்டம் ஒருங்கு சேர்ந்தாற் போல், மிக்க ஒளிவிளக்கும் அழகைக் கண்டி பயந்தார். (இ)

தருணமணிநிலவுமிழுந்தபனரவிகோடி
பெருகொளிவாலுழைமடங்கற்பேரினருண்றமுழுவி
லொருகுடிலிலடியிலெளியொழுகுவிமானத்தினிடைக்
கருணைநிதிவருவதுகொண்டகன்னிழற்செல்வதுகண்டார்.

கௌரவ சோன் அருச்சனைச் சருக்கம். ஙகஉ

இ-ள். சிவந்த அழகிய ஒளியைக் கக்குகின்ற கூரிய கதிர்களையுடைய கோடியரின மிக்க ஒளியைக் கொண்டு வெள்ளிய பிரிமயிரை யுடைய சிங்கத்தின் முதுகில் உயர்ந்த ஆசனத்தில் ஒப்பற்ற பிரணவ வடிவத்தின் ஒளி விளக்குகின்ற விமானத்திலிடத்திலே அருளே உருவமாகக் கொண்டி கன்னிப் பருவத்தையுடைய உமாதேவியார் தோன்றுவதைக் கண்டார்கள். (கூ)

அஞ்சினர்சோற்றிருந்தாரன்னியனச்சேனிடைநின்
அஞ்சிகாரமுப்தோமென்றிறைஞ்சியேயுவகைகொண்டு
பிஞ்சுகாண்மதிவேணிப்பெருமான்வைகிடம்போகி
விஞ்சைகாதன்முதலோருளங்குளிர்வுவிரும்பினர்.

இ-ள். தவஞ் செய்திருந்தவர்கள் உலகமோதர வந்தானென்ற பயமுற்றவராதில் நின்றுயாம் உய்ந்தோம் உய்ந்தோமென்றுவணங்கி மகிழ்ச்சி கொண்டி இளஞ் சந்திரனைத் தரித்த சடாமுடியையுடைய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் இடத்திற்குச் சென்ற இனிமையில் வல்ல காசபமுனிவர் முதலாயினோர் மனங் குளிர விருப்பமுற்றார். ()

முழுத்தலங்களினவனத்தின்முதல்விமலன்வதிகளாச்
செழுத்தவம்பெற்றனமென்றெதிரைசோக்கிநமலர்தூய்
வழுத்தினர்பின்மழுவினடையோன்பரிந்துமனக்கேலமனத
தழுத்துவமிருந்தானென்னின்முர்க்குணர்த்திருனமலன்.

இ-ள் மேன்மை பொருந்திய தலமாகிய கூவிளவனத்திலே பார்வதி தேவியார் பிரசன்ன மாயதைக் கேட்டி அழகிய தவத்தின் பிரயோசனத்தை யடைந்தோ மென்று இந்திரசோக்கி வாசனை பொருந்திய புட்பங்களைத் தூவித் துதித்தனர். பின்பு இளமை பொருந்திய இடபவாகனமாகிய சிவபெருமான் தன்பு கூர்ந்து திருவணக் கோலத்தை இவருடைய மனத்திற் பதிப்பே மென்று அங்கு சென்றார்கு அறிவித்தனர்.

உம்பர்பரசிம்பெரியோனுடையாகனுவந்து
செம்பவளவாய்மலர்த்தவனகெரித்துசோதித்திருந்தார்
விம்பவிதழுமுதமென்சொல்வேல்விழிக்கோல்வினோபமையை
வம்பவிழ்சேடிதழியன்னன்மனம்புரிந்தமறுரைப்பாம்.

இ-ள். தேவர்களைத் துன்பக்கடலில் அழுந்தச் செய்த பெரியவலிமையுடைய சூரபதுமனுக்கு நிருதாயுதத்தையுடைய சிவபெருமான் மனமிரங்கி (திருமணக்கோலம் இக்காலத்திற் காட்டுவேமென்று) சிவந்த பவளம் போன்ற திருவாய் மலர்ந்து விதத்தை யுணர்த்து தவஞ் செய்திருந்தார்கள். இனி கோவைக்கனிபோன்ற அதரத்தையும், தமிழ்த்தேன் போலும் பிருதுவான சொற்களையும், வேற்படையை யொத்த கண்களையும் அழகிய வினோல் கையுமுடைய உமாதேவியாரை, வாசனை பரந்த சிவந்த கொன்றைமாலையைத் தரித்த சிவபெருமான் திருமணஞ் செய்த சரித்திரத்தைச் சொல்லுவாம்.

(கூ)

கௌசல சோமன் அருச்சனைச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள்—சூஉ.

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

பதினைந்தாவது,
திருமணைச் சருக்கம்.

கலி விருத்தம்.

வான்றரமுதலவின்முட்டுமாலையன்
றோன்றவுந்தோன்றிடாதுந்தான்றலார்க்குமின்
றேன்றலாதெழின்மணமென்றெழுந்ததோன்
மூன்றுலகமுமணமுரசமார்த்தவே.

இ-ள். ஆகாயம் பூமி முதலாகிய சராசரப் பொருள்களைப் பெற்ற உமாதேவியார்க்கும், விஷ்ணு பிரமர் முதலாகியோர் பிறக்கவுந் தாமொரு காலும் பிறக்காத சிவபெருமானுக்கும் இத்தலத்தினும் தக்கபடி அழகிய விவாகம் உண்டாயென்று மணமுரசானது திரிலோகத்திலு மெழுந்து முழங்கியது. (க)

கரம்பயின்மழுவினேன்வனத்திற்காஞ்சன
புரம்பயில்புலவரும்பிறரும்போந்தனர்
சரம்பயில்விழியுமைதவஞ்செய்காரிடை
யரம்பையர்முதலினோரடைந்மேவினர்.

இ-ள் காந்தளிடத்திலே பொருந்திய மழுவாயுதத்தையுடைய சிவபெருமானது கூவிள வனத்திலே பொன்னுலகத்திலிருக்கின்ற தேவர்களும் ஏனையோரும் வந்தார்கள். தம்பினை பொருத்த கண்களையுடைய பார்வதி தேவியார் தவஞ் செய்த கன்னிகா வனத்தின் இடத்தில் அப்சரஸ்திரீகள் முதலாய பெண்களும் வருவாராயினர். (உ)

மருத்துவானவருணவாரிவெய்யகருந்
சருத்தினென்வெங்கயிலாயமேய தை
கருந்தடங்கண்ணினுட்கருதிமாதவ
மிருந்தகாந்தாரிடையமேயது.

இ-ள். சிறப்பாற் கடவிற் றோன்றிய அமிர்தத்தை தேவர்க ளுண்ண, கொடிய கஞ்சத் தாம் உண்டிகாத்த விடபெருமான் எழுந் தருளி யிருக்கின்ற அஞ்சனம் கைலாயத்தை யொத்தது. கரிய நீண்ட கண்களையுடைய பார்வதி தேவியாரை நினைத்து முனிவர்கள் தங்கியிருந்த காந்தாரவனம் நீண்ட இமய மலையை யொத்தது. (கூ)

பத்தகணனகையென்றுரிப்பவானவன்
விரவுபொன்னுலகெனமயக்கிவெள்குறச்
சுரர்புரியுன்புரிதொழில்வனப்பிழு
வரியபன்றோற்றமற்றழகுவேண்டுமோ.

இ-ள். குபோன் தனது அளகாபுரி யென்று சந்தேகங் கொள்ள வும் இந்திரன் தானிருக்கின்ற பொன்னுலகோ வென்று மயங்கி வெட்க முறவும் தேவர்களும் விசுவகர்மாவும் செய்கின்ற தொழிற்சித்திரக்களி னும் விஷ்ணுவும் பிரமனும் அலங்கரிக்கவேறும் ஓழகுகொண்டுமோ?()

பைந்தருவைந்துநீள்பத்தராய்மலர்க்
கொந்தவிழிணர்களாற்குளிர்நிறைத்தன
சந்தமணமுறைத்தினகுந்தண்டமிழ்
மந்தமாருதமளாய்வந்திலாயது.

இ-ள். பரிய சந்தானம் சுரசந்தானம் பாரிசாதம் மந்தாரம் கற் பகம் எனும் ஐந்தருக்களும் நீண்டபந்தராதி மலர்க் கொத்துகள் பார்த்த குலிகளால் குளிரநிறைத்தன. சந்தனமரங்கள் வாசனைவீசிச் செந்தமிழ் தொனி கலந்து நிதானித்தற் காற்றானது வந்திலவிற்று. (எ)

வாயுவுமல்கிநிதாழிலின்வாய்த்தவத்
தோயுதண்டினிகரவுர்திசிக்கிடத்
தேமிமென்னுப்புகைசெறிவித்தும்பரி
னேயமெய்கணுருந்துடனேற்றினன்றே.

இ-ள். வாயுதேவனும் நிறைத்து வீசுந் தொழிலினும் இந்திர வாகன மாகிய மேகங்கள் சீரைப்பருகிக் குளிர்ந்த மழைத் துளிகளிக்க இதமு றிக்க, அக்கினியும் மிருதுவான தாளிதப் புகையை நிறைவித்த தாகாயம் எவ்விடத்தும் தன்சுவாலையை விட்டு நின்றது. (சு)

மாசுணவேந்தினம்பனவனம்தொறும்
வீசுறுதழங்கினிளைக்கஞ்செய்தன
பூசுரகலைவபூணலிறைத்தன
காசிதென்னழுதபொற்கலசமேந்தின.

இ-ள். சர்ப்பங்களுக்குத் தலைமையான காகக் கூட்டங்கள் அழகிய காடுகள் தோறும் வீசுகின்ற கல்ல இசத்தினால்களைப வினைக்குனை உண்டாயின. பூசுகின்ற கலவைச் சாந்தையும் தரிக்கின்ற ஆபரணங் களையும் நிறைத்தன, குற்றமில்லாத தெளிந்த அழுதத்தைப் பொற்கும் பங்கள் தோறும் ஏந்தி நின்றன. (எ)

தேனுனினைனம்பணிவேட்டிச்சென்றன
கோணுறையிருநிதிமருங்கினேங்கின
மீனுறுழுவாமதுவிழிந்தவிரைக
ளானவையைத்துமற்றடைதன்மேயின.

இ-ள். காமதேனுவின் கூட்டங்கள் ஏவல்களே விருப்பிச் சென் றன. சுவர்க்கலோகத்திருக்கின்ற சங்கநிதி பதுமநிதி யென்னும் இரு நிதிகளும் பர்வதத்தில் உயர்வற்று விளங்கின. மீன்கள் பொருந்திய உப்

புக்டலும் சாரக் கடலும் ஆயி இருசமுத்திரங்களும் நீக்கலாக மற்
றைய ஐந்து சமுத்திரங்களும் அவனிடம் வந்து சேர்ந்த.

(அ)

மின்னுளார்பாதலமிடைத்துளார்புவிக்
கன்னுளார்காட்டிற்கண்ணுளாரெனப்
பன்னுளாரணத்தினுட்பமின்றபான்மொழிப்
பெண்ணுளார்வம்பிரான்பெருக்கினாரோ.

இ-ள். மேலுலகத்தி லிருப்பவரும் பாதலத்தில் வாழ்கி லிருப்
பவரும் பூமியின்கண் இருப்பவர்களும் திருமணக் கோலங் தரிக்
தற்கு வந்தனரென்ற செல்ல, இசையுள்ள வேதத்தினுட் பொருள்
நிய பான்மொழியு சொற்சினையுடைய உமாதேவியாரிடத்துக் கரு
பெருமான் விருப்பத்தை மிகவும் கொண்டனர்.

(க)

திப்பியலிங்கமுட்டிகழ்ந்துபோற்றுசெஞ்
சுப்புளார்சடைமுதற்றிருன்றத்தோன்றினன்
மைப்பிறழ்கண்ணியைவலவையாற்றுவான்
மெய்ப்பெருந்தனிக்கின்மேல்விற்றிருத்தனன்.

இ-ன் தெய்வத்தன்மை பொருந்திய சிவலிங்கத்தினிடத்தும் விளங்
கித் தோன்றிச் சிவந்த பவளத்தை யொத்த கீண்ட சடைமுதலிய
உறுப்புக்கள் காணும்படி தோன்றினர். அவ்வளத்தோன்றிக் கருமையை
புடைய பிறழ்தலிக்கொண்ட அல்லபற்கண்ணியாரைத் திருமணஞ் செய்
யும்படி உண்மையாகிய பெரிய ஆசனத்தின்கண் வீற்றிருந்தனர். (எ0)

திருவளச்செயலிவச்சிரவணன்றெரிந்
தரியகண்புனைத்தவமுதன்றரீமையோர்
கருதருவாயினும்வதுவைக்கரவன
பொருவில்பூணணிமுதற்புனைந்துபோற்றினன்.

இ-ள். இவ் பெருமானது திருவளச் செய்கையைக் கூடோரன்
தெரிந்து சிறந்த பூமிமுதலிய இடங்களில் வாழ்வார் தவத்தைச் செய்த
தன்மையினால், திருவருளே வடிவமாயிருந்தாலும், திருமணஞ் செய்தற்
காக உள்ள ஒப்பில்லாத ஆபரண முதலானவற்றைச் சாத்திக் துதித்த
னின்றன்.

(எஅ)

இத்தகாத்தினடையெனிகாத்தமொன்
வர்த்தியாற்கொருமழவிடையுகைத்தனன்
றந்தமீனைரனிசாரதக்குறன்
சொத்தவிழ்மாலிவெண்குடைவிறற்றவே.

இ-ன். சந்திரசூத்தக் கல்லினிடத்துச் சூரியகாந்தக் கல்லொன்று
வரிவிருந்தாப் போல ஒரு இளமை பொருந்திய இடபவாகனத்தின்
மேல் வரைச் செலுத்தினர். முதல் வடிவுள்ள பூதக் கூட்டங்கள்
நல்ல தங்களுள்ளே விசை விலையாக நின்ற பூங்கொத்துகள் பரந்த
மாலைகட்டப்பட்ட வெள்ளிய குடையைப்பிடித்து மிழலைச் செய்வனும்.

(எக)

விசணிசாமரைமினாத்தூயவெண்
சேணிகரனிகைதுவன்றிச்சூழ்தரக்
காசனியடைப்பைகளார்ந்திமற்றுள
தோணிபரிசனமிடைத்துசென்றதே.

இ-ன். இரட்டுகின்ற அழகிய சாமரைகள் வீசுகையும் சுத்தமான
வெண்ணிறமுள்ள வஸ்திரத்தாற் கட்டப்பட்ட குடைகள் சேருவிச் சூழ
யும் இரத்தினங்களாற் செய்யப்பட்ட வெற்றிலைப்பைகளையும் கானாடு
களையும் மற்றுள்ளவற்றையும் பிரகாசமுள்ள சேவகர்கள் கொண்டு
செல்லவும்.

(எக)

பண்விடாதான்மறைப்பரியுரோனமே
கொண்டிரண்டாயிரக்கோட்டுவேழமுந்

தண்டமிழாய்மால்வினைதனிப்பதாகையு
மெண்டிசைப்பெருங்களிற்றினமுமீண்டின.

இ-ள். பழமையாகிய சான்று வேதங்களையே குதிரைகளும், ஞான வுருவம் கொண்டு இன்டாயிரக் கொம்பர்களையுடைய அதிராவணம் என்னும் யானையும், தன்னிய முழுமாலையைத்தரித்த விஷ்ணுவாகிய இடபமும், ஒப்பற்ற இடபக் கொடியும் எட்டித் திசைகளினுள்ள பெரிய யானைகளும் தெரிந்தன.

பரிவாரிப்பது. (பரித்தல்=சுமத்தல்) இரண்டாயிரக் கொம்புள்ள யானை ஐராவணமென்பதனை "வான்கோடரண்டாயிரம்" எனவருவதும் தமிழ்நாம்பகையம்மை மின்னைத்தமிழ்ச் செய்யுளாகு மறிக. வேழம்=ஆண் யானை. வேழஞ்சூழ்ந்தே விதந்து கனிதென்றல், என்புழ் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனாரும்.

மால்=பெருமை. அதி பன்பாகு பெயராய் உடையான்மேனின்ற அதிவிஷ்ணு விடையான சரித்திரமாவது-தாரகாசுரன் கமலாசுரன், வித்துன்மாலி என்னும் மூவசுரர் இமையவர்க் கிடுக்கண் செய்வாராயினர். அவர் இறைவனிடஞ் சென்று முறையிட, பெருமான் ஆயிரத்தெட்டு மலர்க்கண்களே மிழித்திருத்தார். திருமால் புத்த வடிவங்கொண்டு காசதர் பீடாசுடன்வந்து அசுரரிடஞ்சார்ந்து அவரை மயக்கிப் புத்தராக்கி இறைவருக் கறிவித்தார். இறைவர் உலகமாயை ஒரு கெடுதேர்மீது இவருவான் சென்றகால், தேர் வடவாய்கின்ற தேவர் முதலாயினோர் எம்மைக் கொண்டன்றே இறைவன் பகைகடக்க உன்னினன் என்ற இறுமாத்தராக, அன்னதை யறிந்த அலகண்டப் பெருமான் தன் திருவடியை வைத்த காலத்து அச்சமுறிக்து தேர் முதலியன சூலைத்தன. அதுகண்ட திருமால் வெள்ளேறுவி வெளியேனை வணங்கி தருள வேண்டி மென்றிரப்ப அடியார் வேண்டுவார் வேண்டியாங் கருளும் விடையுமுற்றி அதன்மேல் ஆரோகணித்தருளினர். இடபமானேன் எளியனேனும் இறைவனைச் சுமக்கும் எற்றலி பாடத்தே வேண்டு

இறுமாப்பு, எம்பிரானுதன் தன்னியல் காட்ட, எதை இது விழிகளும் பிதுங்கித் தன்னிடங்கே டோறும் இரத்தம் இருகடல்போ லொழுக இறந்தனவெனையே எக்கையே எனிரக்கி பிரம்பி இடிபோல் இரு கிறத்திற் புரண்டு துறந்தபோன்றிடந்தது. இவ்வாறு கந்தபுராணம் உபதேச காண்டம் முதலியன முழங்கா வின்றன. இன்னும் திருவருணைத் தமிழ் வேதப் பிரமாணமுங் காட்டி நிறுத்துவாம்.

திருவாசகம்.

தச்சு விடித்துத் தாமடி விட்டது
மச்சு முரிந்த தென்றுத்தி பற
வழிந்தன மூப்புர முத்தி பற.

கடகரியும் பரிநாவுத் தேருங் கச்சே
யிடப முகத் தேறிய வாறெனக் கறிய வியம்பே.
நட மதில்க ளெலை முன்றுந் நடுவெரித்த லக்காளி
யிடப மதாப்பத் தாளினன் றிருமால்வாண் சாமுலோ. (கூ)

புக்கவர் பதினெருபுக்கவக்கரு
மெங்களீசனென்வெள்ளேறுந்தாமரைச்
செங்கணனெண்கண னூர்தியுஞ்செழுந்
தங்கள்வெள்ளிடைவலஞ்சூழ்ந்தபோதிலே.

இ-ள். எச்சத முத்திரர்களுடைய இடபவாகனக்கும், எமது சொலருத்திரரது வெள்ளே இட்டுழ்தியும் தாமரை மலர் போலுஞ் செவ்த கண்ணையுடைய விஷ்ணுவினதும் பிரமனதும் வாகனக்களும் அழிய உயர்வாய வெண்ணிறமுடைய (சிவபெருமானது) இடபவாகனத்தை வலம்வந்து போற்றவும். (கூ)

உரியபுராதனன் றவளவுப்பு
மிரவிகுரிதமாரிர்ப்பூண்டபோம்

புரவியினீட்டமும்புரந்தரன்படாம்
விரவியசான்மருப்பிபமுமேவா.

இ-ன். வலிய உருத்திரையுடைய மசாத்திரத வெள்ளையானையும், பனிரு குரியர்களுடைய பன்னிரு தேர்களும், அலத்திற் கட்டப்பட்ட டிய குதிரைக் கூட்டங்களும், இந்திரன முகபடாம் போர்த்த காலு கொம்பர்களை யுடைய ஐராவத யானையும் வரவும். (கச)

தட்பகலாமதிதனதனித்திலப்
புட்பகவிமானமும்புலரேகையர்
விட்பகல்கெடமிளிர்விமானபுந்தரு
மெட்பகவிடம்பிதிதின்றியெய்தவே.

இ-ன். குளிர்மையாயிய சந்திரிகை புடைய சந்திரனும் குபேரனதும் முத்தவிமானமும் புட்பகவிமானமும், ஏகாய தேவர்களது, விரித்த குரியனை ஒளியுங் கெடும்படி விளங்கும் விமானக் கூடங்களும், என்னின் பிளவிடமும் வெறில்லை யென்னும்படி வரவும். (கவ)

நாரதர்மகதியாழ்நரம்புதைவரச்
சீரதம்பிழிசைதெளிப்பவிஞ்சையர்
காரதாரவுமிசகரக்குமுஞ்சடைச்
சாரதர்வெள்ளமுந்தழுவிச்சாவே.

இ-ன். நாரத முனிவர் மகதி வீணையின காம்புகளைத் தடவிப்பாடவும், வித்தியாதரர்கள் சிறப்பாயிய வழியை யுடைய ஏழு இசைகளையும் தெளிக்கவும், பெரிய சர்ப்பங்களை வளித்த குறிய முடியையுடைய பூத வெள்ளங்கள் ஒலிசெய்துவரவும். (கஎ)

தனிதவெழுவர்தாபதர்தலங்கெழு
புனிதர்புள்ளடியர்கிம்புருடர்சித்தர்கள்

பனிதரவிப்மியபலவரையருட்
கனிதரவருகியவிரதர்கைதாழ.

இ-ன். மிக்க தவத்தை புடைய ஏழு முனிவர்களும், கல்வை பொருந்திய பரிசுத்தரான கருடர்களும் கிம்புருடர்களும் சித்தர்களும் உடல் நடுங்க விம்மலுற்ற பலவளப்போலும் வயினையுடையராய், மனங் கனிந்திருகும் விரதத்தினை புடையவராய்க் கைகூப்பி வணங்கவும். (கக)

அங்கமாமறையொலியருணர்ச்சாகைத்
துங்கவேதநிரவொலிதொண்டாரார்ப்பொலி
சங்கொலிமுழவொலிதழங்கவாக்கியம்
பொகுகொலியுபுணர்ப்பவாய்புதைத்தாலிப்பவே.

இ-ன். சிட்சை வியாகரண முதலிய அங்கங்களோ புடைய நிகத வேத முழக்கமும் இருவை புடைய திருக்கி தேவதை கையின்கணுள்ள உயர்வாய பிரப்பி னெலியும், அடியவர்கள் துவனிக்கும் ஒலியும், சங்கு முழக்கமும் மூச வாத்தியத்தின் ஆரவாரமும் சச்சிக்க, ஒருவரோ டொருவர் பேசும் ஒலியும் அவையோடு கூட எவ்விடத்தையும் மூடி யொலிக்கும். (உ0)

நிலமலிவானுறதண்மலைத்தின்செய்கையுங்
கலமலிகடலன்கருத்தழுத்துமே
கொலைமலிமழுவலன்கொண்டவெம்பிரா
னிலைமலைகூடினனெனஞ்சென்றெய்தினனே.

இ-ன். வில் பொருந்திய ஒளிகொண்ட தெற்றியை புடைய உமை யம்மையாரின் திருமணச் சட்டியும், ஞாலறிவு மிகவுள்ள கௌசல மாச னது எண்ணம் நிறைவேறலும், கொலைத் தொழின் மிக்க மழுவா யுதத்தை வலக்காத்திற் தரித்த சிவபிரான், இவைகள் நிறைந்த விம்ம வனத்தை யடைந்தனர். (உக)

மதிரதலனங்குகுற்றேவன்மங்கையர்
புனலுஞ்சுண்ணமும்பூவுந்துவினர்
துதிவரமங்கலச்சுடர்கைசுற்றின
ரெதிரெதிர்புகுந்துபல்லாண்டுகூசத்தனர்.

இ-ள். அந்த சந்திரனைப் போன்ற நெற்றியை யுடைய உமையம்மையாரதுகுற்றேவலைச்செய்யும்பெண்கள், புதிய வாசனைகொண்ட சுண்ணச் சாந்தையும் புட்பங்களையுஞ் சிந்தினர், திகிள்பாட மங்கலநீங்களைக் கையாலெடுத்து ஆலத்தி சுற்றினர், முன்னர் முன்னராகச் சென்று பல்லாண்டு பாடினர். (உஉ)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தொல்லிடையிழிந்துவிண்ணந்தொடுமணிமண்டபத்தின்
மல்லல்வாலுழைமடங்கலாசனத்திருந்தான்வள்ளல்
செல்கெழுபூவைவண்ணன்றிருமணப்பத்தரின்கி
ழொல்லையிலேவலாற்றற்குரியரையுஞற்றினின்றான்.

இ-ள். அருள் வள்ளலாராய சிவபெருமான் பழைய இடபத்தினின்றும் இறங்கி, ஆகாயத்தை யளாவிய அழகிய மண்டபத்தின்கணுள்ள, வலிய வெண்மையான உரோமத்தையுடையசிங்காசனத்தின்கணிருந்தனர். மேகத்தைப் போன்ற திருமேனியையுடைய விட்டுணு திருமணப் பத்தரின் இடத்து விரைவிற் குற்றேவல் செய்தற்கு உரியாரைச் செலுத்தி நின்றனர். (உக)

சேயரிபரந்தபுன்கட்செலதிபர்விரைவித்போடி
மாயிரும்புவனமுற்றும்வியிறுவாய்த்துயிர்த்தகன்னித்
தாயருந்தவங்கனிந்ததையல்சீறடியிற்றுற்ந்து
தூயலர்தூயினர்சோபனஞ்சொல்லித்தொழுதுநின்றார்.

இ-ள். செவ்வரி பரந்த பெரிய கோக்குடைய ஏவல் நேரியர்கள் விரைவிற் சென்று, கரிய பெரிய பூமி முழுவதையும் தன்னிடத்தடக்கித் தோற்றுவிக்கும் கன்னிப் பருவ முடைய மாதாவும் அரிய தவத்தின் முதிர்ச்சியுமான உமையம்மையாரது, திருவடிதங்களில் விழுந்து வணங்கி, சுத்தமாகிய புட்பங்களைச் சொரிந்தார், மங்களவாழ்த்துக்களைக் கூறி வணங்கி நின்றனர். (உச)

கொண்டலோகையிலெருத்தன்கோட்டெலாண்முகமூஞ்செவ்வாய்
விண்டபுன்னைசுமிழ்ப்புன்வேட்கையுள்கருணைதாங்கு
தெண்டையங்கண்ணுமுள்ளேயிடந்தபேரன்புந்தன்பா
லண்டர்கோன்போற்றகென்னியார்வமுந்தோன்றினின்றான்.

இ-ள். பார்வதி தேவியார், தாம் கொண்ட பெரு மகிழ்வினாலே பிடரைவளைத்த ஒன்பது முகமும், இவ்வாய் திறக்கப் பெற்ற முகமைந்தும் தோற்றமும், விருப்பும் அருளைத் தரித்த கயல் மீன் போலுங் கண்களும், மனத்தைப் பதித்த பெரிய அன்பும், தன்னிடத்தைத் தேவர்க்குத் தலைவராகிய சிவபெருமான் தேடி வந்தார் என்னும் ஆசையும் கண்டார் யாவருக்கும் தோன்றும்படி நின்றார். (உடி)

அன்னைபாடலகீராட்டிரணிவண்வணிந்தார்
துன்னலர்மாலைமற்றுஞ்சுவருட்டினர்செம்
பொன்னிறமாதர்மாதுபூசுனபூசினர்பைம்
கன்னலிற்கனிமென்சொல்லாள்கமழ்வனகமழ்செய்தார்.

இ-ள். (தோழியர்) பசிய கரும்பினும் மிருதுவான கனிந்த சொற்களையுடைய பார்வதிதேவியார் தூய மைத்த தாயர்க்கு அபிடேகிப்பனவற்றை யபிடேகித்தார், அலங்காரத்தை யணிந்தனர், நெருங்கிய பூக்களாற் கட்டப்பட்ட மாலைகள் முதலியன சூட்டினர், பூசுவனவற்றைப் பூசினர், வாசனைப் பொருள்களை மணக்கச் செய்தனர். (உசு)

மாகதன்னியருந்தெய்வவரையரமகளிர்தாழு
நாகன்னியரும்வீணைகரம்புளர்ங்கைமாரும்
போகன்னியருமேனைப்புனங்கெழுமணங்கனூரும்
யோகன்னிகையைச்சூழவலம்புரியொன்சங்கொத்தாள்.

இ-ள். தேவப் பெண்களும் தெய்வத் தன்மை கொண்ட மலையர மகளிரும், நாகமாதர்களும், கந்தருவப் பெண்களும், போகபூமியின்க ணுள்ள பெண்களும், மற்றைய இன்பப்புனத்தி லுள்ள தெய்வமக ளிரும், தவஞ் செய்த உமை யம்மையாரைச் சுற்றியிருத்தலால் வலம்பு யைப் போன்றிருந்தனர் அம்மையார். (உ எ)

இரதிமேனகையரம்பைதிலோத்தமையிந்திராணி
யருமுருப்பசியணித்தவரிசைசிற்பணிகளாற்றத்
திருமகள்கலைமடந்தைதிருபுடைசெங்கைகல்கப்
பரையொருகுமரியாகிப்பயப்பயவடிபெயர்த்தாள்.

இ-ள். இரதி, மேனகை, அரம்பை, திலோத்தமை, இந்திராணி, அரிய ஊர்வசி, கட்டளையிட்ட முறைமையின்படி ஏவல்களைச் செய்ய வும், இலக்குமி தேவியும் சரசுவதிதேவியும் முறையே வலப்பக்க இடப் பக்கங்களி லின்று கவரிகொடுக்கவும், பராசத்தியானவர் ஒரு கன்னிப் பெண்ணாய் நின்று மெல்ல மெல்ல அடிபெயர்த்து வைத்தனர். (உ ஏ)

நொய்யபஞ்சிடச்சிவந்துபரிவுற்றுநொந்தயாமேல்
வெய்யகன்மிதிக்கலாற்றேமென்றுரீர்வெருவலியன்
கையதுபடும்பேறென்னக்கருதுகவென்றுபையச்
செய்யதாட்கறைதலேபோற்சிலம்பெர்ழிபுலம்புமாதோ.

இ-ள். நுண்ணிதாகிய டஞ்சை யூட்டுதலாற் சிவப்பும்ற வருத்தங் கொண்டு துன்பப்பட்ட பாங்கள், இனிமேற் கொடிய கல்லின்மேல் மிதித்தற்குச் சக்கமாட்டேம் என்ம நீவிர் அஞ்சற்க, அங்ஙனம் கடந்

தால் சிவபெருமானது திருக்கரம் தீண்டும் பெரும்பேறு உண்டாகு மென்று நீங்கக் கடவீர் என், மெதுவாகச் சிவந்த திருப்பாதங்களுக் குச் சொல்வதுபோல, சிலம்புகளின் சத்தஞ் சத்திக்கும். (உக)

பொற்றகம்பினைமென்கொங்கைப்பொதைசுமந்தொழிக்துமாழ்ந்து
சிற்றிடையிருந்துபாதுகாத்தனம்விரைவிற்சென்மி [ட்ப
ஞெற்றைவெண்குழையோன்பாற்செல்லுகளதாட்கமலங்கே
மற்றவைபுகலுமாபோன்மணிக்கலியொலிப்பமன்னோ.

இ-ள். பொன்னுலகிய கலசம்போன்ற இரண்டு பிருதுவாகிய தனங்கள் தூங்கும் பாரத்தைச் சுமந்து, அதனும் நேர்க்துவருந்தும் சிறிய இடையின்மீது இருக்து யாங்கள் பாதுகாத்தேம், சீக்கிரம் செல்வீராக என்று, வெள்ளிய சங்கக் குண்டலத்தை யுடைய சிவபெருமானே கோக் கிச் செல்லும் இரு திருவடிகளாகிய தாமரை மலர்கள் கேட்கும்படி தாம் எடுத்துச் சொல்லுமாறு போல அழகிய மேகலை முதலிய பூச ணங்கள் ஒலிக்கா கிற்கும்.

பெண்கள் இடையிலே தரிப்பன காஞ்சி, மேகலை, கலாபம், பரு மம், விரிசிகை எனப் பலவகைப் படலான் சான்றோர் பன்மையாற் கூறி னர். அவற்றுட் காஞ்சி - எண்கோவை மணி. மேகலை - ஏழு கோவை மணியாகும். கலாபம் பதினாறு கோவை மணி, பருமம்-பதி னெட்டுக் கோவை மணி, விரிசிகை யென்பது பரு முத்தக் கோவை மூப்பத்திரண்டாற் செய்யப் பட்டது. இது நீலமணிகள் கொண்ட பூங் தொழிலை யுடைய நீலச்சாத குடையின்மீது தரிப்பது. மேற்கோள் வருமாறு:—

சிலப்பதிகாரம் - கடலாடுகாதை.

பிறங்கியமுத்தமை மூப்பத் திருகாழ்
நிறங்கொளர் பூத்தொழி னீலமை குடையி, என்றதனும் காண்க.

"குறுக்கு செறியொடு கொய்யகச்சை - நிருகளர் பூத்தொழி னீல மை குடைய - பிறங்கிய முத்தமை மூப்பத் திருகாழ்" அதித்த நூலை

வர வல்லும் கணிக்தாள்" என்னுஞ் சங்கதூல் கொண்டு வேறறுப்பின்
அணியெனக் கோடலு மொன்று. (கூ0)

தூயகைதீண்டினமெம்மான்கைதொடலினிப் பெறுதுமென்
வாய்திறந்தறைதல்போலவரிவளைமுரலத்தூது [னு
போயிறைசெவ்விநோக்கிமீள்குவானெழுதலேபோ
லாயிசையோதியோதியெழுக்தெழுந்தனிகளாடட.

இ-ள். சுத்த மாயை (இறைவியின்) திருக்கரத்தைத் தீண்டினேம், இனி எமது இறைவனது திருக்கரங்களைத் தொட்டபெறவே மென்று வாய்திறந்து சொல்லுதல் போல வரிவளைகள் சத்திக்க, தூதாகச் சென்று பெருமானுடைய காலநிலையை யுணர்ந்து, திரும்பும்படி புறப்படுக் தன்மைபோல ஊராயப்பட்ட காமரப் பண்ணைப் பாடிப் பாடி யெழுந்து வண்டுகள் ஆடவும்.

வரிவளை எனவே, மாணிக்கவளை, முத்தவளை, சூடகம், பரியகம், வெள்ளி வளை, பவளப் பல்வளை, கவரத்தின வளை, சங்க வளை, என்னும் இவைகள் கொள்ளப்படும்.

வஞ்சியாடதி.

புரைதபு சித்திரப் பொன்வளை போக்கி
லெரியவிர் பொன்மணி யெல்லென் கடகம்
பரியகம் வால்வளை பாத்தில் பவழ
மரிமயிர் மூன்கைக் கமைய வணிக்தான்.
என்றதனாற் காண்க. (கூக)

கீற்றினன்சீர்த்திதேய்த்தாய்க்தாய்கரண்குறுகின்முனென்னுச்
சாற்றுதல்போலவொன்கண்சூழைமுகர்த்தடவிமீளை
வேற்றிசையவர்கைகூப்பவெய்திநமிறையையுள்ளே
போற்றினள்பண்டுபோலோர்புடையில்வீற்றிருந்தாளன்னோ.

இ-ள். விழுதியை யணிந்த எம்பிரைவனது புகழெல்லாம் பொருந்தியோய், நினது முன்னழகைப் பார்ப்பே மென்று சொல்லுதல் போல, (தேவியாரது) ஒள்ளிய திருக்கண்கள் (சிவ பெருமானது) குண்டலம்பொருந்திய திருமுகத்தைத்தடவி மீண்டுவர, பார்வதி தேவியார் ஏனைய தேவகூட்டங்கள் எல்லாம் கைகூப்பி வணங்கத் திருமணச் சாலையை யடைக்து, சமழ தலைவராகிய சிவபெருமானைத் தம் மனத்திலுள்ளே அதித்தனர், முன்னர்ப் போல அவரின் ஓர் பக்கத்தில் வீற்றிருந்தனர் பராசத்தி யம்மையார். (கஉ)

அங்கியுந் தூமமுஞ்சேயலரியும்புயலும்போலும்
பைங்குவளையுஞ்சிவந்தபகற்றினாளிர்மணிகளுஞ்சூழும்
கொங்கலிழ்தருவும்பைம்பூங்கொடியுமோருழிக்கண்டாங்கு
நிங்களங்கண்ணியோனுந்தேவியுமுடனிருந்தார்.

இ-ள். அக்கினியும் புகையும் சிவந்த சூரியனும் மேகமும் போலவும், பசிய குவளை மலரும் சிவந்த பசுமை கொண்டு விளங்கும் இரத்தினக்களும், சூழ்ந்த வாசனை பரந்த மரமும் பூங்கொடியுமாகிய ஓரிடத்திற் காணப்பட்டதற் போலவும், பிறைச் சந்திரனைத் தரித்த சிவபெருமானும் பார்வதியும் ஓரிடத்தில் வீற்றிருந்தனர். (கூக)

உறையிருவோருமொல்வாவுவகையங்கடலிற்பண்
முறையெழிலமுதகண்களான்முகந்துண்டார்முற்று
மறைகழற்பிரானுமெங்களம்மையும்புரிவிநோத
மறைகளுமுணராவின்னம்யாவர்மற்றுணரவல்லார்.

இ-ள். பரமேசுரனும் பார்வதியும் ஒருகுடிருந்த மகிழ்ச்சியுடைய கடலின் கடலே முறையாக எழுந்த அமிர்தத்தைத் தமது கண்களினால் மொண்டு துக்கு நின்றவர் யாவரும் பருகினர், ஒலிக்கின்ற வீரக் கழலையணிந்த சிவபெருமானும் எழுந்த இறைவியும் செய்யும் திருவிளையாடல்

கள் வேதங்களும் இன்னும் அறியமாட்டா, அவ்வாறுமின் எவர்தாம் அறிய வல்லவர். (கூச)

தாமரைக்கிழவன்வேதச்சடங்குசெந்தழலீண்டுற்றச்
காமர்பூங்கொடிசெங்கைப்பூங்கரத்தருக்கடிக்கைமார்பன்
மாமலர்த்தடங்கைச்செந்தாமரையையும்படிக்கிமையன்
பூமலர்ச்சிரகீர்பெய்தடிமலர்போற்றிநின்றான்.

இ-ள். பிரம தேவர் வேத விதிப்படி திருமணச் சடங்குகளைச் செய்விய அக்கினி கொண்டு செய்ய, அழகிய பூங்கொடி போன்ற உமாதேவியாரது சிவந்த திருக்கரமாகிய காந்தள் மலரையும், கொன்றை மாலையணிந்த பார்வதி யுடைய சிவபெருமானது, சிறந்த பரந்த நீண்ட திருக்கர மாகிய தாமரை மலரையு மொன்று சேர்த்து, திருமால், பொலிவுள்ள புட்பங்களை யுடைய காகத்தின்க ணுள்ள கீரைவார்த்து, தாமரை மலர் போன்ற பாதங்களைத் துதித்து நின்றார். (கூடு)

தெய்வ சந்த விருத்தம்.

வான்முழவைக்கும்பிதிர்ந்தனவால்வளைபரக்கிமுழங்கின
நான்மறையங்கருவின்றனநான்மலரன்பர்கைசிந்தின
மோனிகள்சிந்தைகளிந்தனமூவுலகுங்களிகொண்டன
வானுயர்ந்தனனம்பிகையர்மிவர்மன்றல்சிறந்தது.

இ-ள். தேவதுந்துபிகள் ஒத்து மொலித்தன; வெள்ளிய சங்குகள் மிக்கு முழங்கின, நான்கு வேதங்களும் வேதாங்கங்களும் ஒலித்தன, அன்பருடைய திருக்கைகள் அன்றலர்ந்த புட்பங்கள் சொரிந்தன, மோன நிலையை யுடைய முனிவர்களுடைய மனங்கள் களிகூர்ந்தன, மூவுலகமும் களிப்புக் கொண்டன, மேலான உயர்வை யுடைய பிரமனைத் தெய்வமாகிய சிவபெருமானதும் பார்வதி தேவியாரதும் திருமணம் சிறப்புற்றது. (கூக)

எம்பெருமானையுமன்றலிலெம்பெருமாட்டியையுந்தாழ
நம்பெருமாதவனன்றிதுநன்றிதுதீமையின்றெதிர்
வம்பலர்மாரிவழங்கினர்மந்திரமோதிவணங்கின
ரும்பருமாதவரும்பிறரும்பெறுமோகமெய்தினரே.

இ-ள். தேவர்களும் முனிவர்களும் பிறரும் இத்திருமணக் காலத்திலே, எமது பெருமானையும் பெருமாட்டி யாரையும் வணங்க, நாங்கள் செய்த பெரியதவம் நல்லது நல்லது என்று சகதிர மாமுனிவர் எதிரிற் சொல்லி வாசனை பரந்த புட்பமழையைப் பொழிந்தார், மந்திரங்களைச் சொல்லி வணங்கினர், யாவர்க்கும் மகிழ்ச்சி பொங்கிற்று.()

நன்னெடுமாலனும்வேதனுநாதருநற்றவரோழவருங்
கன்னியிருந்தவள்பெருங்கௌசலகோமகனுந்தாழ
மன்னியகாட்சிவழங்கினன்மால்வடிவாயியமாதூமை
முன்னியவாறுமுபன்றனண்மூலமுமீறுமிலாதவள்.

இ-ள். கல்ல நீண்ட வடிவத்தை யுடைய திருமாலும் பிரமனும் வாத முனிவரும் மற்றைய சப்த முனிவரும், கன்னிப் பெண்களும், தவத்தின் மிக்க பெருமையை யுடைய கௌசல சேரராசனும் தாழ்ந்து வணக்கும்படி நிலைபெற்ற திருமணக் கோலத்தைக் காட்டி யருளினர் திருமாலி னுருவாகிய உமாபிராட்டியார் முதலும் முடிவும் இல்லாதவ ரானமையால், நினைத்ததைச் செய்தற்குத் தொடங்கினள். (கூஎ)

என்னுடையன்னையுமெந்தையுமின்னணைநன்னிலின்மாமண
மன்னினர்பால்வழிபாடுகளாற்றிவரம்பெறுமன்னவன்
கன்னவிலுந்திரடோளினன்கௌசலன்மாசில்வளம்பெற [ன்
முன்னகர்கண்டதுநீண்மெனமூதுணர்ந்ததன்மொழிந்தா

இ-ள். என்னுடைய தாயாகிய பார்வதி தேவியாரும் தந்தையாராகிய பரமேசுரனும் இவ்வாறு கன்மையாகப் பெரிய திருமணத்தைப் பொருந்தினர், அவர்களிடத்து வழிபாடுகள் செய்து வரம்பெற்ற பன்னகனுடைய கல்லி யுவமானமாகச் சொல்லப்படுகின்ற திண்ட பூமியினையுடைய கௌசலசேராசன், குற்றமில்லாத செல்வத்தைப் பெறும்படி முன்னர் சுகரு செய்தது கேட்பீராவென்று பழம்பொருளை யறிந்த சூதமுனிவர் கூறத் தொடங்கினர். (கூக)

திருமணச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள்—சகூஉ.

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

பன்னிரண்டாவது,

நகரிசெய் சருக்கம்.

கலி விருத்தம்.

அந்தரமையாளுடையான்மனைப்
பந்தரிற்றுளவோன்முதற்பண்ணவர்
தந்தமக்கருணல்கிமண்டாங்குகோன்
சிந்தையார்வந்தெரிந்துகண்சேர்த்தினன்.

இ-ள். அத்தக் காலத்தில் எம்மை யடிமையாக வுகிடைய உமாபிராட்டியாரது திருமணப் பந்தரிலே விட்ணு முதலிய தேவர்களாவர்க்கும் திருவைனைப் புரிந்து, பூமியைத் தாங்குகின்ற கௌசல சேராசனது மனவிருப்பத்தை யறிந்து அவனிடத்து திருக்கண் வைத்தருளினர். (சிவபெருமான்) (க)

ஆயகாலியரசனெம்மண்ணறன்
சேயதாமரைச்சீரடிதாழ்ந்தெழிந்
தூயகான்மறைகுடத்திப்பனின்
னேயம்யாதறையென்றனனேயில்லான்.

இ-ள். அவ்வாறிய சமையத்திலே கௌசல சேர மன்னவன் எமது கடவுளாகிய சிவபெருமானது சிவந்த தாமரை மலர்போலும் சிறந்த பாதங்களை வணங்கி யெழுந்து, பரிசுத்தமுடைய நான்கு வேதங்களைக் கொண்டு துதிக்க, ஒப்பில்லாதவராகிய சிவபெருமான் அரசனை நோக்கி இன்னருள் பெண்ணுகூறுகி யென் றருளினர். (உ)

சீர்மணஞ்செய்வெடிபுமிதிந்தப்
பார்மறும்பல்லுயிருமபலிந்தப்மா
றோவனம்பதியாற்றவுவந்தருள்
கூர்கெனப்புரிகென்றனன்மோதிலான்.

இ-ள். திருமணஞ் செய்த சிவபுரமாகிய இந்தத் தலத்திலே தூய்மையினனுள்ள பல அன்மக்களும் வணங்கி புப்பும்படி, ஒருவனப்பதிதை புடைய சுகரத்தைச் செய்வதற்குத் தேவரீர் மகிழ்வெய்தி அருள்க என்று பிரார்த்தித்தான், அதற்குச் சிவபெருமானும் அவ்வாறு செய்க என் றருளினர். (கூ)

காட்சியும்வரனும்பெற்றகாவல
னுட்பிறந்துசுகரஞ்குயிற்றுவா
னுட்சியொன்னாளிகர்க்கோலியுஞ்
சூட்சியொழுந்துணைவரப்போக்கினான்.

இ-ள். திருமணக் கோல தரிசனமும் வரமும் பெற்ற கௌசலசேன், சபமுகூர்த்தம் கொண்டு ஓர் சுகரத்தைச் செய்யும்படி, தனது ஆருகைக் குட்பட்ட அன்புடைய சுகரத்திற்குத் திருமுகமும், உபாயத்தில் வல்ல ஒற்றனையுமனியுக் துணையாகச் செலுத்தினான்.

வரம் - வரன் எனப் பேரியாய் நின்றது. சாலன் - சாத்தலில் வல்லவன். சுகி என்னும் வடமொழி சுகரம் எனத் திரிந்து நின்றது. மனம்போன்ற மாடமாளிகைகளையும் செய்குன்றுகளையுமுடையது எனத் தாதுப் பொருள் கொள்க. ஓலை=திருமுகம். கடிதம். (சு)

ஒற்றுடன்சென்மடங்கலியுள்ளுணர்ந்
துற்றதோதத்துணைவனொண்மாலிதி
மூற்றுத்தானைமுதலகண்டொய்யெனக்
கொற்றவற்பணிந்தொன்றெனக்கூடினர்.

இ-ள். தனதுவசோடு அடைக்த அத் திருமுகத்தின் கருத்தை யறிந்து, தக்க சூழ்ச்சினைச் சொல்கின்ற மந்திரி மார்களும், மேலான சிறந்த திரவியங்கள் முழுவதும் சேனைகள் முதலானவும், அரசனிடம் சென்ற விசையிற் கண்டி அரசனைப் பணிந்து ஒருங்கு சேர்ந்தார். (கூ)

தேரும்யானையுமாவுந்திறற்படை
போருந்தோச்சித்துணைவருமொக்கலும்
பாருமுய்யும்படிமன்னன்வல்லினி
யீருமெந்தைகுற்றேவலனுயினன்.

இ-ள். இரதங்களும் யானைகளும் குதிரைகளும் வலிய சேனைகளும் மந்திரிமார்களும் சுற்றத்தார்களும் உலகத்தவர்களும், உய்யுமாறு கௌசலராசன் வலிய தீவினையைப் போக்குகின்ற எமது பரிவனது குற்றேவற்காரனுன்.

உலகத்தார் யாவரும் உய்யும்படி இக்கரத்தைப் புரிவித்தலால் கௌசலசேர மன்னன் சிவபெருமானது ஏவலாளாக நின்றான என்பது கருத்து. பார்=பார்க்கப் படுவது, பருமையை யுடையது, பூமி. மன்னன்=பெருமையை யுடையவன். (சு)

கூறுமோர்திசைக்கைந்துகுரோசங்கொண்
டூறினன்குதிசையுமியம்பிடின்
மாறில்புண்ணியமாத்தலமாயிடை
யூறில்பல்கலியொண்மதித்தோன்றலே.

இ-ள். சொல்லப்பட்ட ஒவ்வொரு திசைகளுக்கும் ஐவைந்து குரோசதூரம் கொண்டு, முடிவில்லாத கான்று திக்குகளினுள்ள இடங்களான சொல்லுமிடத்துக் குற்றமில்லாத பெரிய புண்ணிய தலமாகும். அவ்விடத்துப் பிழையில்லாத பலகலைகளையெல்லாம் கற்றுணர்ந்த நிறைவினையுடைய சந்திர குலத் தோன்றலாகிய கௌசல ராசனுனவன்.

ஒவ்வோர் திசைக்கும் ஐந்து குரோசமாக நான்கு திசைகளுக்கும் இருபது குரோச தூரம் புண்ணியதலமாகும். குரோசம்-கூப்பிடுதூரம்.

கன்னிகாரவனமுங்கனகருசுனை
மன்னுமில்வவனமுமற்றேனையும்
பொன்னினிணைகாபோலப்புனிதித்தான்
றன்னதன்புதழைத்துளிலங்கவே.

இ-ள். (இலெபருமான் வீற்றிருக்கின்ற) கன்னிகாரவனத்தையும், உமாதேவியார் எழுந்தருளி யிருக்கின்ற வில்வ வனத்தையும் மற்றைய இடங்களையும் கண்ட சுவர்க்க லோகம் போலச் செய்தான், தன்னுடைய அன்பு மிகுந்து விளங்கும்படி. (அ)

நகரமெனுமந்தணனன்குறப்
புகரிணறுபொருவில்பிரமமுழு
நிகரில்வேள்விகளாற்றிடநீண்மறைப்
பகரவீறுபள்ளியுங்கண்டனன்.

இ-ள். சுசுக்க லொலிடத்தும் ஆதிசைப் பிராமணர் நன்மை பொருந்த, குற்ற மில்லாத உயர்வடைய நூறு பிரமகூபங்களையும், ஒட்டில்லாத யாகங்கள் செய்தற்காகவும் நீண்ட வேதங்கள் அத்தியயனஞ் செய்தற்காகவும், பன்னிரு ஊரும் செய்தார். (கூ)

நன்னிறிற்றிருநாலிருமங்கலம்
பொன்னகர்க்கிணைபொற்பக்குயிற்றியே
தன்னிகர்த்தகுநியைத்தலங்தொறு
மன்னுவித்தடிபோற்றினன்பன்னவன்.

இ-ள். கன்மையுடன் தழுவி எட்டு மங்கலங்களை, சுவர்க்கலோகத்திற்குச் சமான மாகும்படி செய்து, தனக்குத்தானே யொப்பாயுள்ள

வலிக்கத்தை எட்டு மங்கலங்களோடும் விளைபெறத் தாபித்துத் திருவடிகளைப் பூசித்துத் துதித்தான் அரசன். (கஎ)

ஆங்கவற்றுளாளிமுரன்றுய்ப்பிழி
தேங்கமழ்ந்தண்டுதேக்கும்பொன்ணண்மலர்த்
கோங்குதீள்வனத்தின்குணபாற்றிசைப்
பாங்கர்வைகுமோர்பண்புடைத்தொண்கிரி.

இ-ள். தேன்துளி, வண்டுகளொலித்து, தேன்மணம் வீசி, மதுவுண்டு தேக்கிய அழகிய அன்றலர்ந்த புட்பங்களையுடைய நீண்ட கோங்க வனத்தின் தேற்திசையின் பக்கத்தில் ஓர் அழகிய மலையுண்டு. (கஅ)

போதவிழ்ந்தபெண்ணைப்பொலன்குரப்புய
னுதரங்கொண்டருச்சித்திறைஞ்சலாற்
முதருந்தன்மலர்த்தடஞ்சோலைசூழ்
கோதைமங்கலமென்பர்சொற்கூறினர்.

இ-ள். விரிந்த பனம்பூவால் செய்யப்பட்ட பொன்மயமான மாலையை யணிந்த மார்பினையுடைய கௌசல சோன் அருச்சித்து வணங்குதலால், மகாத்தம் பொழியும் குளிர்ந்த மலர்களையுடைய சோலைகளாற் சூழப்பட்ட கோதை மங்கல மென்பர் சொற்பாகுபா னைர்ந்த பெரியோர்கள். (கஉ)

தொக்கசேழற்சுரும்பினுதக்கினீர்.
சுக்கசாமாதிக்குணதீர்த்தத்தின்
மிக்கநீள்குறிவெவ்வெரிபோற்றலா
லக்கினேயனென்றுபவாய்த்தலர்.

இ-ள். தொகுதி கொண்ட வரகு மலைக்கு வடக்கே, நீர் மிக்கு விளங்கும் சாமகதி யென்னுஞ் சிறந்த நீர்த்தக் கரையின்கண் மிகுந்த

விளக்கும் நீண்ட சிவலிங்கமானது வெப்ப மூடைய அக்கினி தேவனும் பூசிக்கப்படுதலால் தூய்மையை யிக்கும் என்று கூறுவர் உண்மைப் பொருள் கொண்டவர்.

மருந்துகளும், மணி, பொன், சந்தனம், தேன் முதலிய பலவும் கலந்து தொக்க தன்மையால் "தொக்கசேம்ம சருப்பு" என்றார். குறி எச்சமது உடகார மொழி. (கட)

மாதவந்தனின்மாமறையோர்குழீஇ
போதலின்புற்றிருருங்குணர்ந்தோதலிற்
போதலர்ந்துபொதுவயல்சூழ்ச்சதூர்
வேதமங்கலமென்பர்சொன்மேதையோர்.

இ-ள். பெரிய தவத்தினை யுடைய சிறந்த அந்தணர் ஒருங்கு சேர்ந்து, ஓதுதலில் விருப்புக் கொண்டு எல்லாவற்றையும் அறிந்து தீர்த்தியனஞ் செய்தலால், புட்பங்கள் மலர்ந்து வயல்கள் சூழும் சதுர் வேத மங்கலம் என்று கூறுவர் பொருளே யறிந்த புலவர். (கஉ)

பொவதேர்ச்சன்னதிக்குடபால்வைகு
மெவ்வம்மில்புரியெல்லவர்வந்தினை
செவ்விதிற்புரியச்சிறந்தோங்குவ
தவ்வியத்தசோதிப்பெயரானதோ.

இ-ள். கடலே நிகர்த்த கல்லை பொருகை எதிர்கு மேற்குப்பக்கத்தில் இருக்கும் குற்ற மில்லாத சிவலிங்க மானது, சூரியர்கள் வந்து பூசனையை அன்புடனே செய்தமையால், அவ்வியத்த சோதிலிங்கம் என்னும் பெயரினால் விளங்கும். (கஙு)

விரிமங்கலமேருவலங்கொளும்
புரிமங்கலத்தோர்போற்றவவ்விடன்

பரிமங்கலம்பாடகராடல்சூ
ரிரவிமங்கலமென்றுவிளங்குமே.

இ-ள். பனி கலந்து விளக்கும் மேருமலையைச் சுற்றி யோடுங் குதிரை கட்டப்பட்ட மங்கல வழிவான இரதத்தை யுடைய சூரியர்கள் துதித்தலால் அந்த இடம், பாடகர் மங்கலமாகப் பாடி யாடலிசைச்செய்து துதிக்கின்ற இரவிமங்கலம் என்று கூறுவர் அறிவுடையோர். (கசு)

விமலிலில்வவனத்தின்மேற்றிசை
கமழும்பானதிதீர்த்தத்திற்காமர்தென்
னழுதலிங்கமதுவைகுமவ்விட
னழுதமங்கலமென்பரறிஞரே. ஊ

இ-ள். கிருமலியாகிய உமாபிராட்டி பெறுத்தருளி யிருக்கின்ற சுவிள வனத்திற்கு மேற்குத் திசையில், வாசனை வீசுகின்ற பால்தீர்த்தத்தின் கரையில் அழகிய தெளிந்த அமுதலிங்கம் இருக்கும். அதனால் அவ்விடத்தை அமுத மங்கலம் என்பர் புலவர். (கஎ)

தரவு கொச்சகக்கலிப்பா.

மங்கலஞ்சூழ்தலினட்டமங்கலக்கேத்திரமென்றுஞ்
சங்கரனேவலிற்றனிவெண்குடைநிருபன்றருதலினுற்
கங்கைபுணர்காஞிநிகர்கௌசலமாபுரமென்றும்
பொங்குபெரும்பெயர்புனைந்துபொலிந்ததுபுண்ணியநகரம்.

இ-ள். அத்தப் புண்ணியத் தலமானது எட்டு மங்கலவூர்கள் நிறைதலின் அட்டமங்கல கேத்திரம் எனப்படும். சிவ பெருமானது ஆஞ்ஞைப்படி ஒப்பற்ற வெண்கொற்றக் குடையை யுடைய கௌசல சோழ மன்னவன் செய்தலால், கங்காநதி பொருந்திய காஞ்சியை நிகர்த்த கௌசல மாபுரம் எனவும் மேலான பெரிய பெயரைத் தரித்து, விளங்கிற்று. (கஅ)

வையனைமால்கிரிபிரமகிரிசிவபுரஞ்சத்தி -
சையமுயரியகருமாவரையெனுமென்கயிலாயக்
துய்யபரையோர்நிசன்முகநிருந்தருள்தாடம்பாற்
செய்யகவுசலபுரமேவியபுமென்பதுதின்னம்.

இ-ன். அப்ப சயனத்தை யுடைய காரணன மலையும், பிரம மலை யும் சிவமலையும் சத்தி மலையும், உயர்வாய வராக கிரியும் தக்கின கயி லாயமும், சுத்தமாகிய சத்தி தீர்த்தமும் சண்முக நதியும் ஆகிய இவை கள் சூழ்ந்திருக்கும் இயல்பினால் அழகிய கௌசல புராணத சிவபுர மென்பது சத்திய மாகும்.

பை - ஆகு பெயர். பை=படம். பூதரம்—பூ=பூமியை, தரம்= தரிப்பது. வரை - மலை. அது உவமிப்பாகுபெயராய்க் கனவுக்கு ஆதி, அது சினையாகு பெயராய் மூங்கிலுக்காகி, அது தானியாகு பெயராய் மூங்கில் உண்டாதற்கு இடமாகியிம் மலைக்காதலின் மும்மடி யாகுபெயர். கிர் கான்மடியாகு பெயரென்க. (கக)

கதிர்மணிமாளிகைகோருங்காம்ரெயிலுத்தேர்ந்து
பதியுமாபதிதிருவிழாப்பொலியும்படைகுடிசூழ்
மதியமைச்சுமுதலியமாண்புறமகவுக்கரசாகி
யதிர்கழற்காலரசரெமையாளுடையான்கழலடைந்தார்.

இ-ள். அக்கரத்தில் ஒளி பொருந்திய இரத்தினக்கல் குயிற்றிச் செய்யப்பட்ட மாளிகைகள் நிறைந்து விளக்கும், அழகிய மதில்கள் சூழ்ந்து தோன்றும், உமாதேவியாரின் கணவரான சிவபெருமானது திருவிழாக்கள் பொலிந்து விளக்கும், படை குடி சூழ் அமைச்சர் முத லிய அரசமாட்சிகள்பொருந்த ஒலிக்கின்ற வீரக்கழலணிந்தகாலையுடைய சேரராசர்கள் தமது மைந்தர்க்கு அரசாட்சியைக் கொடுத்து எம்மை அடிமைக் கொண்ட சிவபெருமானது திருவடிப்பேறுபெற்ற அத்தன்மை தினைய படைத்தனர்.

உமா என்னும் வடமொழிக்கு, உ=வேண்டாம், மா=அம்மா என்று உபதேசப் பொருள் கூறுவர். மலையரசன் மகளாகத் தோன்றி இறைவி யைந்தாம் வயதில் அரனைத் திருமணஞ் செய்வதன்றித் தவஞ் செய்ய முற்றி கொண்டபோது, தந்தை யான மலையரசன், கின் னுடல் பொறாது. ஆதலால் "அம்மையே தவஞ்செய்ய வேண்டாம்" என்று தடுத்தமையால் வந்த பெயர். அன்றி உ-அ-என்னும் விபட் டிப்பிரணவங்கள் சேர்ந்து உமா என்ற இருத்தலிற் பிரணவ மாக வும், பிரணவ வடிவாகவும், பிரணவப் பொருளாகவும் இருப்பவள் உமை என்றல் கூறுதல் மென்க.

"படைகுடி கூழமைச்சு நட்பரண
மூடையா னாசகு லேழை.

என்றுத் திருக்குறட் செய்யுளை கூறிற்று. இதை மாறி என் னும் அதிகாரத்தான் அமிலன் எல்லை முனைக. முதலிய என்றவை யாலே கட்டு, காண் என்பதும்,

ஐம்பெருந்தரு வன் ஆமைச்சரென் றுரைப்பட்ட புரோகிதர், சேனாபதிகள், தூதர், சாரணர் என்பவரும்,

ஏனைவகைத் தானைவர் ஆயிர காணத் தியன்றோர், கரும வதி காரிகள், சுற்றத்தார், கடைகாப்பாளர், நகர மாக்கள், படைத்தலைவர், இவுளி மறவர், யானைவீரர் என்பாரும்,

ஈவகை யுறுதிச் சுற்றமாகிய கட்டாளர், அந்தணர், பண்டித் தொழிலாளர், மருத்துவக் கிளைஞர், நிமித்திகப் புலவர் என்பாரும் கொள்க. (உ0)

மறைபயின்மாதனிர்வில்லவனஞ்சிவமாமலைதாப்ப
னிறைவனமுமன்றிருவாவினன்குடியென்றெருதலமற்

றறையினுங்கேட்பினுமுத்தியடைவிக்குமதனுற்றல்
சிறிதறிந்தவாறுசொல்கேமென்றனன்செம்நெறிச்சூதன்.

இ-ள். வேதங்களே யத்தியயனஞ் செய்கின்ற முனிவர்களே! வில்வனம் பெரிய சிவமலை என்பவற்றிற்கு நடுவே, எமது கடவுளாகிய அறுமுகப் பெருமான் எழுந்தருளி யிருக்கின்ற திருவாவினன்குடி என்று ஒருதலமுளது. அது, தன்கண் வசிப்பினும் தன்பெயரைக் கேட்பினும் முத்தி கூடச் செய்யும், அக்காரணத்தினால் அதன் பெருமை முழுதுஞ் சொல்லுதல் கூடாது, ஒருநிறுத்து அறிந்தவாறு கூறுகின்றேமென்றார், செப்பமான வழியிற் செல்லுஞ் சூதமுனிவர்.

மறை=மறைந்த பொருளை யுடையது என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். இறைவனறமுகன் - இருபெயரொட்டு. ஆதிசத்திமுதலிய ஐஞ்சத்திகளோடு குடிலை பெனுஞ் சத்தி யொன்று கூட்டி ஆறு சத்திகளே முகமெனக் கூறுவாரும், அவ குணங்களே முகமெனச் சொல்வாரும், சிவபெருமானது ஐம்முகங்களுடன் நேவி திருமுகமொன்றைக் கூட்டி யவையாமென்பாரும், அகர உகர மகரங்களோடு காதம், விந்து, சத்தி என்னும் ஐறஞ் சேர்த்து மூ+ மென்பாரும், ஈசானம், தற் புருடம், அகோரம், வாம தேவம், சத்தியோ சாதம் என்னும் ஐம் முகங்களுடன் அதோமுக மொன்றுஞ் சேர்த்து முகமா மென்பாரும் ஆகப் பலரும் பலவாறு கூறுப.

(உக)

நகர்செய் சருக்கம் முற்றிற்று.

ஆக செய்யுள் சஅக.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

பதின்மூன்றாவது,

திருவாவினன்குடிச் சருக்கம்.

அநுசரிக்க கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தேனிமிர்போதக்குரவன்றெரிவரும்போதக்குரவன்
ஞானதவம்பாரணத்தான்றழுவுதெய்வவாரணத்தா
னானகரவச்சிரத்தானுறுவச்சிரத்தான்
வானபரங்குன்றத்தான்வளர்த்தபரங்குன்றத்தான்.

